# மின்நிலா

ஆகஸ்ட் 3, 2020



engalblog.blogspot.com

**எங்கள் ப்ளாக் பதிவுகளின் வாராந்திர தொகுப்பும், மற்றும் சில சுவையான பகுதிகளும், படங்களும் ...**

**இந்த மின்நிலா புத்தகத்தைப் பற்றிய உங்கள் கருத்துகளையும், யோசனைகளையும் ...**

engalblog@gmail.com

**என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும். நன்றி.**

அட்டைப்படம் : அனுப்பியவர் : அப்பாதுரை

============

பதிவுகளுக்கு இடையே உள்ள படங்கள் :
See the names in the photo.

**ஆசிரியர்கள் :**
**B SRIRAM**
**K G GOUTHAMAN**
**KAYJEE**
**K G Y RAMAN**
**K S**

மின்நிலா 010 (முந்தைய இதழ் சுட்டி)

## பொருளடக்கம் பக்கம் எண்

பலாப்பழ பணியாரம் - நெல்லைத் தமிழன் ரெஸிப்பி ........................................................ 2
கண்மணி நீ வரக் காத்திருந்தேன்....ஜீவி......................9
கேள்வி பதில்...........................................................26
எங்கள் ஆசிரியர்கள் எழுதிய மின்னூல்கள் ......... 30
வாசகர் கருத்து....................................................... 32
காயத்ரி அப்பா! :: ஸ்ரீராம்..........................................34
பொக்கிஷம் : சில ஜோக்ஸ்... ஸ்ரீராம்.........................38
பாவை ஓவியம்.. துரை செல்வராஜு............................43
அருண், அங்கிதா அண்ட் அறிவுஜீவி............................47
ஆயிரம் காலத்தைக் கடந்து விழி நீரினைக் கண்கள் மறந்து.....................................................51
பொத்தக்குடியில் ஒரு குருவிக்கூடு ..............................56
ஏதோ மனிதன் பிறந்து விட்டான் ரமா ஸ்ரீநிவாசன்60
சிநேகிதியே.....மஹா ரவி............................................66
பேசும் படங்கள் :: kayjee............................................ 70
மெட்ராஸ் நல்ல மெட்ராஸ் :: நரேன்............................72

========

(குறிப்பு : நீல நிற தலைப்பு கொண்ட பகுதிகள் மின்நிலாவில் மட்டுமே வெளியிடப்படுவன )

# பலாப்பழ பணியாரம் - நெல்லைத் தமிழன் ரெஸிப்பி

ரொம்ப நாளைக்கு அப்புறம் திங்கக் கிழமைக்கு செய்முறை அனுப்பறேன்.  இது நாங்கள் பெங்களூருக்கு நிரந்தரமாக வந்த பிறகு எழுதும் முதல் சமையல் குறிப்பு. அதனால் இனிப்புடன் ஆரம்பித்திருக்கிறேன்.

சென்னையிலிருந்து வரும்போது ஏகப்பட்ட சமையல் பாத்திரங்களை அங்கேயே விட்டுவிட்டு வந்துவிட்டேன். இரவு 9 மணிக்குள் எல்லாவற்றையும் லாரியில் ஏற்றணும். அன்றைக்கு இரவே 11 மணிக்கு பெங்களூர் பேருந்தில் ஏறணும். அதற்கு முன்னால் வீட்டை சுத்தம் செய்துவிட்டு சாவியை உரிமையாளரிடம் ஒப்படைக்கணும் என்று ஏகப்பட்ட வேலை கடைசி நாளில். கிச்சன் பொருட்களை பேக் பண்ண நான் அரை நாள்கூட ஒதுக்காதது பெரிய தவறாக ஆகிவிட்டது. அந்த மாதிரி விட்டுவிட்டு வந்த பாத்திரங்களில் ஒன்று குழிப்பணியாரம் செய்யும் பாத்திரம் (சட்டி என்ற வார்த்தையை நாங்கள் உபயோகிப்பதில்லை). இங்க வந்த பிறகு, அருகிலேயே இருக்கும் மாமனாரின் வீட்டிலிருந்து அவரிடம் இருந்த குழிப்பணியாரம் செய்யும் பாத்திரத்தை வாங்கிவந்தேன். அவர்கள் அதனை உபயோகப்படுத்துவதில்லை.  அதில் தோசை மாவை வைத்து சில பல மசாலாக்களைச் சேர்த்து (காப்சிகம், கேரட் போன்று) குழிப்பணியாரம் செய்தேன். எல்லோருக்கும் பிடித்திருந்தது.

எங்க வீட்டுல ஒரு டிபனைப் பண்ணினால், அதனை திரும்ப இன்னொரு நாள் பண்ணுங்க என்று சொல்ல மாட்டாங்க. கேட்டா, அப்புறம் போரடித்துவிடும் என்பார்கள்.  ஆனால் எனக்கோ குழிப்பணியாரம் செய்வதில் ஆர்வம் ஜாஸ்தியாகிவிட்டது.  தில்லி வெங்கட் அவர்களின் தளத்தில் அவரது மனைவி ஆதி வெங்கட்,  பலாப்பழ பணியாரம் செய்ததை எழுதியிருந்தார்கள். அந்தப் படம் எனக்கு மனதில் பதிந்துவிட்டது.

சென்னைலயும் பெங்களூர்லயும் அதுவரை பலாச்சுளைகள் மட்டுமே வாங்கிவந்தவன், கொரோனாவால், பெங்களூரில் பலாச்சுளைகள் விற்பது நின்று, கடந்த 2 மாதங்களாக பலாப்பழத்தை விற்கிறார்கள். நாங்கள் இருக்கும் குடியிருப்பின் அருகிலேயே இரண்டு மூன்று இடங்களில் பலாப்பழங்கள் விற்பதைப் பார்த்து, அதை வாங்கும் ஆசை பிடித்துக்கொண்டது. ஆச்சு, இந்த இடுகை எழுதும்வரை, 7-8 பலாப்பழங்கள் சிறிதும் பெரிதுமாக வாங்கிவிட்டேன். 200 ரூபாய்க்கு வாங்கும் பழத்தில் கிட்டத்தட்ட 150-200 சுளைகளாவது இருக்கும்.

பலாப்பழத்தில் இரண்டு வகை உண்டு. வரிக்கன், கூழன் என்று. கூழன் சக்கையில் (நெல்லைல சக்கைன்னுதான் பலாப்பழத்தைச் சொல்லுவோம்) பழம் கொஞ்சம் கொழகொழ டைப்பா இருக்கும். பொதுவா வரிக்கன் சக்கைதான் நல்லா இருக்கும். நான் வாங்குவது எல்லாமே வரிக்கன் சக்கை. பலாப்பழத்தைப் பற்றி ஆரம்பித்தாலே ஏகப்பட்ட விஷயமும் அனுபவமும் எழுதலாம். அதை இத்தோடு நிறுத்திக்கொண்டு, பலாப்பழ பணியாரம் செய்முறைக்குப் போகிறேன்.

தேவையானவை

பலாச்சுளை 6-7
வெல்லம் 50 கிராம்
தேங்காய் துருவல் 2 மேசைக்கரண்டி
ரவை 1 1/2 மேசைக்கரண்டி
அரிசி மாவு 1 மேசைக்கரண்டி
கோதுமை மாவு 1 மேசைக்கரண்டி
நெய் 1 மேசைக்கரண்டி
ஏலப்பொடி கொஞ்சம்

செய்முறை

1. பலாச்சுளையை சிறிது சிறிதாக கட் பண்ணிக்கோங்க.

2. கடாயை அடுப்பில் வைத்து சிறிது தண்ணீரில் வெல்லத்தை உருக வைத்துக்கோங்க.

**3. இன்னொரு கடாயில், நெய் விட்டு, தேங்காய் துருவலை சிறிது வறுத்துக்கோங்க (பிரட்டிக்கொள்ளுங்கள்). அதில் கட் பண்ணிவைத்துள்ள பலாச்சுளைகளைப் போட்டு கொஞ்சம் வேகவைத்துக்கொள்ளவும். குழைந்துவிடக்கூடாது.**

**4. அதோட, வெல்லத்தண்ணீரை (முதலிலேயே உருக வைத்திருக்கிறோம்) சேர்த்து பலாவை நன்றாக வேகவைக்கவும். பிறகு நல்லா ஆறணும்.**

**5. அதில், அரிசி மா, ரவை, கோதுமை மா, ஏலப்பொடி சேர்த்து ஓரளவு கெட்டியான தோசைமா பதத்தில் கலக்கவும். தேவைனா கொஞ்சம் தண்ணீர் சேர்த்துக்கோங்க. இந்த மாவை சிறிது நேரம் விட்டுவிடவும் (ரவை மற்றும் எல்லாம் நல்லா கலந்து ஊறட்டும்).**

**6. பணியார கடாயை அடுப்பில் வைத்து, குழிகளில் சிறிது நெய் (அல்லது எண்ணெய் விட்டு) நல்லா சூடான பிறகு, ஸ்பூனினால் மாவை விட்டு, பணியாரம் செய்யவும். ஒரு புறம் சிறிது வெந்ததும் அதற்கென உள்ள கம்பியாலோ இல்லை மர ஸ்பூனாலோ பணியாரத்தைத் திருப்பிவிடவும். எனக்கு கம்பியால் திருப்புவது சரியாக வரவில்லை. அதனால் ஸ்பூனை உபயோகித்தேன். பண்ணப் பண்ண லாவகம் வந்துவிடும் என்று நினைக்கிறேன்.**

**7. இரண்டு புறமும் வெந்ததும் எடுத்து தட்டில் பரத்த வேண்டியதுதான்.**






























எதைச் செய்தாலும் எனக்குக் குறைவாகச் செய்யத் தெரியாது. கொஞ்சம் (கொஞ்சமென்ன கொஞ்சம்..நிறையவே - மனைவியின் மைண்ட் வாய்ஸ்) அதிகமாகவே செய்துவிடுவேன். அன்று நான் 20 பலாச்சுளைகள் உபயோகித்தேன். அதற்கேற்றவாறு எல்லா அளவுகளும் மாறும். நிறைய பணியாரங்கள் வந்தன. மாமனார் வீட்டிற்கும் கொடுத்து அனுப்பினேன்.

எங்க வீட்டுல இனிப்பு நிறைய போணியாவதில்லை. மனைவி, ஒரு சமயத்தில் 2-3 சாப்பிட்டாலே அதிகம். பெண், டயட் என்று சொல்லி 3க்கு மேல் சாப்பிடவில்லை. பையனுக்கு சில இனிப்புகள்தாம் ரொம்ப இஷ்டம். அவனுக்கு பலாப்பழ வாசனை பிடிப்பதில்லை (ரொம்ப டாமினேட்டிங் என்று சொல்லிடுவான். இதனாலேயே பலாப்பழம் வந்த உடன் பால்கனியில் கொண்டுபோய் வைத்துவிடுவேன். ஓரிரு நாளில் பழமாயிடும். அங்கேயே வைத்து பழத்தை வெட்டி சுளைகளை எடுத்துவிடுவேன்). அவன் 5 சாப்பிட்டிருப்பான். நானும் அதிகமாக சாப்பிடவில்லை (நானே செய்ததால், எவ்வளவு எண்ணெய், நெய் உபயோகித்திருக்கேன் என்பது தெரியும். கன்னா பின்னாவென எடை அதிகரித்துவிடுமே என்ற பயம்தான் காரணம்). ஆனால் ரொம்ப ருசியாக இருந்தது.


வெறும்ன பலாப்பழத்தைச் சாப்பிடுவதற்குப் பதில், இந்த மாதிரி செய்து பாருங்கள்.

அன்புடன்,
நெல்லைத்தமிழன்.




மீண்டும் பொருளடக்கம் பகுதி செல்ல ...

# கண்மணி நீ வரக் காத்திருந்தேன்....ஜீவி



**சில உணர்வுகள் உன்னதமானவை**
**அவற்றை உணர**
**ஆரம்பிக்கும் ஷணத்திலேயே**
**அந்த உன்னதங்களும்**
**உயிரைப் பற்றி**
**ஒன்றில் ஒன்றாய்க் கரைகின்றன.**

அவர்கள் பார்க்கில் உட்கார்ந்திருந்தார்கள். கூப்பிடு தூரத்திற்கு யாரும் இல்லை. தூரத்தில் கண்ணுக்கு எட்டும் பார்வை தாண்டி நாலைந்து சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருப்பது மங்கலாக இங்கிருந்து தெரிந்தது.

அந்தப்பக்கம் பார்த்து விட்டு, "அவங்கள்லாம் என்ன விளையாட்டு விளையாடறாங்க, சொல்லுங்க பார்ப்போம்.." என்றாள் ரதி.

"என்ன, என் பார்வை எப்படியிருக்குங்கறதுக்கு டெஸ்ட்டா?" என்றான் ப்ரியன்.

"அப்படித்தான் வைச்சிக்கோங்களேன்.."

"எப்படித்தான்?.."

"எப்படின்னு சொன்னாத்தான் சொல்லுவீங்களா?"

"அப்படித்தான் வைச்சிக்கோயேன்.."

"எப்படித்தான்?.." என்று கேட்டுவிட்டு சிரித்தே விட்டாள் ரதி.

காதலர்கள் பேச்சுக்கு அர்த்தம் கிடையாது. போக்கில்லாமல் எதையோ இழுத்து எதையோ தொட்டு எப்படியெல்லாமோ வளைந்து வளைந்து அர்த்தம் இல்லாமல் நீண்டு கொண்டே இருக்கும். அர்த்தம் தான் இருக்காதே தவிர ஒருத்தொருக்கு ஒருத்தர் வாங்கல் இல்லாமல் சீண்டல், சிணுங்கல், பொய்க் கோபம், பொருமல், விட்டுக் கொடுத்தல், வீண் வாதம் எல்லாம் நிரம்பியிருக்கும்.

"சரியான பூம்பூம் மாடு! நான் சொல்றதையே நீங்களும் திருப்பிச்சொன்னா எப்படி?" என்று சிணுங்கினாள் ரதி.

"நீ மட்டும் என்னவாம்?"

"சரி. நான்-நீங்க ரெண்டு பேருமே பூம்பூம் தான்! கேட்டதுக்குச் சொல்லுங்க.."

"என்ன கேட்டே?.. மறந்திட்டேன். இப்போ சொல்லு."

"மறக்கற ஆசாமியைப் பாத்தா தெரிலே?" என்று ரதி நொடித்துக் கொண்டாள்.

"நிஜமாலுமே மறந்திட்டேன், ரதி!.. இப்போ கேளேன். சொல்றேனா, இல்லையா, பாத்துக்கோ.." என்று அவள் வலது கை எடுத்து வளையல்களை நெருடினான் ப்ரியன்.

சிவப்பு நிற கண்ணடி வளையல்கள் அவள் செக்கச்செவேல் கைக்குப் பாந்தமாக இருந்தது.

"ஒரு கண்டிஷன். ஒரு தடவை தான் கேப்பேன்."

"உடனே பதில் சொல்லிடணும்.. அவ்வளவு தானே?" என்று அசால்ட்டாகச் சொன்னான்.

"இந்த ஜபர்தஸ்த்துக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை.. அதோ.. அங்க..." என்று அவனிடமிருந்து விடுவித்துக் கொண்ட கையை நீட்டிக் கேட்டாள் ரதி. "அதோ.. அங்கே, பசங்கள்லாம் என்ன விளையாட்டு விளையாடிகிட்டிருக்காங்கன்னு சொல்லுங்க, பாக்கலாம்.."

இரண்டு கைகளையும் விழிகள் வரைத் தூக்கி, விரல்களை நிமிர்ந்தி விழிப்புருவங்களுக்கு நீட்ட வாக்கில் அணைகட்டி, கண்களை இடுக்கி, ஏகப்பட்ட முஸ்தீபுகளைச் செய்து கொண்டு, "அடிச்சக்கை! கோலி விளையாட்டுனா விளையாடுறாங்க.." என்றான்.

"ஐயே!.."

"என்ன, ஐயே?"

"கோலி விளையாட்டா.. நல்ல பாத்துச் சொல்லுங்க.."

"பாக்கறதுக்கு என்ன இருக்கு?.. அந்த சிவப்பு சட்டை வாலு விரல் நுனிலே துருத்திண்டிருக்கறது, கோலிக்குண்டு இல்லாமா, என்னவாம்?"

"பைனாக்குலர் வைச்சுப் பாத்த மாதிரி, விரல், நுனி, கோலிக்குண்டுன்னு கப்ஸாலாம் விடாதீங்க.."

"பின்னே?.. அவங்க என்ன வெளையாடுறாங்க?.. நீ தான் சொல்லேன்.."

"சொல்றேன்.. சொன்னா என்ன தருவீங்க?..

இப்போ என்ன தருவது என்பது பற்றி சளைக்காது வாதம். வாதத்திற்கு இடையே தருணம் பார்த்து அவள் கையை இவன் பற்றி அதன் வழவழப்பிற்கு பேச்சை மாற்றலாமா என்று யோசிக்கிறான்.

அவளோ, இவனது சிவப்பு உதடுக்கு, மீசைக்கு, மீசையின் மேல் சிம்மாசமிட்டிருக்கும் மூக்கின் வளைவுக்கு, கன்னக் கதுப்பிற்கு என்று தன் விழிகளை வாளை மீன் போல சுழற்றி கடைசியாக அவன் கருவண்டுக் கண்களில் கொண்டு வந்து தன் பார்வையை நங்கூரம் போட்டு நிறுத்துகிறாள்.

மனிதர்களின் மனோபாவங்களைத் தீர்மானிப்பதில் சில இடங்களுக்குத் தனிப் பெருமையே உண்டு. நூல்நிலையங்களுக்கு அவற்றில் முதல் இடம். ப்ரியன்- ரதி முதன் முதல் ஒரு நூல்நிலையத்தில் தான் சந்தித்தார்கள். புதினங்களை யும், பருவ இதழ்களையும் வாடகைக்குக் கொடுக்கும் தனியார் நூல் நிலையம் அது.

தி. ஜானகிராமனின் பரம ரசிகை ரதி. என்றைக்கோப் படித்திருந்த அவரின் 'அன்பே ஆரமுதே' நாவலை மீண்டும் வாசிக்கும் ஆவலில் நூலகரிடம் சொல்லி வைத்திருந்தாள். அந்த நூலின் இரு பிரதிகள் இருப்பதாகவும், ஆனால் அந்த இரண்டுமே இப்பொழுது கைவசம் இல்லாமல் வெளியே படிக்கப் போயிருப்பதாகவும் அடுத்த வாரம் வந்தால் கிடைக்கும் என்றும் நூலகர் சொல்லியிருந்தார்.

அடுத்த வாரம் அதற்காகச் சென்ற பொழுது தான் தி.ஜா.வின் அந்த நாவல் அவளுக்குக் கிடைத்தது மட்டுமில்லை, ப்ரியனின் அறிமுகமும் கிடைத்தது. தான் வாசிக்க எடுத்துச் சென்றிருந்த 'அன்பே ஆரமுதே' நாவலை திருப்பிக் கொடுக்க அவன் வந்தது, அதையே வாங்கிச் செல்ல ரதி வந்தது இயல்பான ஒரு ஒற்றுமையாய் அமைந்தது. ப்ரியனும் தி.ஜா.வின் எழுத்தை உள்ளார்ந்து மோகிப்பவன் என்பது அவர்களிடையே ஒரு ஒத்த உணர்வை ஏற்படுத்தக் காரணமாக இருந்தது. அவர்கள் இருவருக்குமான ஒரு மனப் பிணைப்பின் தொடக்கம் இப்படித்தான் ஆரம்பித்தது.

"எங்கப்பா கிட்டே நம் காதலைப் பத்தி சொல்லிட்டேன். பச்சை சிக்னல் போட்டுக் கொடி காட்டிட்டார்.. தெரியுமோ?" என்கிறான் ப்ரியன்.

"எங்கப்பா மட்டும் என்னவாம்?.. பொண் கேட்டு மேற்கொண்டு பேச உங்க வீட்லேந்து எப்ப வந்தாலும் தாரை வார்த்துக் கொடுக்கத் தயாரா இருக்கார். தெரிஞ்சிக்கங்க.."

"பின்னே ஒரு நல்ல நாள் பார்த்து..."

"பார்த்து?..."

"டும், டும் தான்!"

ரதியின் முகம் அஷ்ட கோணலாக சுளிக்க, "கடைசிலே அதானா?" என்றாள். அவள் குரலில் ஏமாற்றம் வழிந்தது.

"எதானா?"

"பார்த்துப் பார்த்து அமைஞ்சக் காதலை பலிகொடுக்கத் தானா?" என்றாள்.

# 2

## காதல் ஐஸ்கிரீம் போல

## உணர்வதற்குத் தான் ஜிலுஜிலுப்பு

## உள்ளார்ந்து என்னவோ

## தகிக்கும் வெப்பம்! வெப்பம்!

"எ ன்ன சொல்றே, ரதி?" என்ற ப்ரியனின் திடுக்கிடுதலில் அவன் புருவங்கள் வில் போல் வளைந்தன. குரல் தடுமாற்றத்தில் அவன் மனசு அடிபட்டதை உணர்ந்து ரதி துடித்துப் போய் விட்டாள்.

"ஒண்ணுமில்லே.. லீவ் இட்.." என்று நேரடியாக அவன் முகத்தைப் பார்க்கும் திராணியற்று தூரத்தில் விளையாடும் சிறுவர்கள் பக்கம் பார்வையைப் பெயர்த்தாள் ரதி.

"இல்லை.. நெனைச்சதை சொல்லிடு, ரதி!" என்று அவள் கரம் பற்றினான் ப்ரியன். வழக்கமான உணர்தலைத் தாண்டியதான ஒரு வெதுவெதுப்பை அந்தத் தொடுதலில் உணர்ந்தான். "ரதி! இதோ பார்.. நீ நெனைச்சதை எங்கிட்டே சொல்லாமலேயோ, இல்லை, நான் நெனைச்சதை உங்கிட்டே சொல்லாமலேயோ இது வரை இருந்ததில்லே.. இப்போ மட்டும் திடீர்னு என்ன புதுப் பழக்கம்..? ம்?.. சொல்ல வந்ததை முழுதும் சொன்னால் எனக்குப் புரிபடும்" என்றான்.

அவனை நிமிர்ந்து பார்த்த ரதியின் விழியோரத்தில் லேசாகத் தளும்பிய நீர் ஒரு நிமிடம் தாமதித்து உருண்டு திரண்டு அவள் கன்ன ரோஜாக்களில் வழிந்து அவன் கரத்தில் விழுந்தது. அவள் கண்ணீரைப் பார்த்ததும் பதறிப் போய்விட்டான் ப்ரியன். இத்தனை நாள் கொண்டாட்டத்தில் இல்லாத ஒரு சோகம்

அவன் மனசைப் பிழிந்தது. "என்ன நடந்தது, ரதி? சொல்லு.." என்று கெஞ்சலாகக் கேட்டான்.

"ஒண்ணுமில்லே.. லேசா மனக்கிலேசம். எதையோ இழந்திடுவோமோன்னு எனக்கு பயமா இருக்கு.." என்றாள்.

"எதையோன்னா?.. சரியாச் சொல்லு. என்ன அதுன்னு யோசிச்சுச் சொல்லு."

"சொல்றேன்.." என்று ஒரு நிமிடம் தாமதித்து மிடறு விழுங்கினாள் ரதி. " ஒரே வரிலே சொல்லிடறேனே?.. கல்யாணத்துக்கு அப்புறம் நாம் ரெண்டு பேருமே இந்தக் காதல் உணர்வை இழந்திடுவோமோன்னு பயமா இருக்கு. அதான்."

"காதல் உணர்வை இழக்கிறதாவது?.. என்ன, தத்துபித்துன்னு?.. வழக்கமா பாயிண்ட் பாயிண்ட்டா பேசுவியே, அப்படிப் பேசு. என்னாலே முடியும்ன்னா உன் பயத்தைப் போக்கறேன். விவரமா சொன்னாத் தானே தெரியும்.." என்று அவள் விழிகளை நேருக்கு நேர் கூர்மையாகப் பார்த்தான் ப்ரியன். அந்த நேர் பார்வையைத் தாங்க சக்தியில்லாது தலையைக் கவிழ்த்துக் கொண்டாள் ரதி.

மெல்ல அவள் தாடை தொட்டு நிமிர்த்தி, "சொல்லு, ரதி.." என்றான் ப்ரியன், ஆதரவாக.

"காலாதி காலத்துக்கு என்னை நீயும், உன்னை நானும் காதலிச்சிண்டே இருக்கணும்ன்னு ஆசை, ப்ரியன்.. இது பேராசை இல்லை; நியாயமான ஆசை. கல்யாணம்ங்கற பேர்லே இந்த ஆசைக்கு ஒரு End போட்டு முடிச்சிடுவாங்க ளோன்னு பயமா இருக்கு.. அதான்.." என்று திக்கித் திணறி ஒருவழியாக மனசில் இருப்பதைச் சொன்னாள் ரதி.

"முடிச்சிடுவாங்களா? அப்படீன்னா?.. யார் முடிச்சிடுவாங்க?"

"நம்மைப் பெத்தவங்க.."

"புரிலே. நீ சொல்றது சுத்தமா புரிலே. அவங்க எப்படி நமக்குக் கல்யாணம் பண்ணி வைச்சு அதன் மூலமா நம்மக் காதலை முடிச்சு வைக்க முடியும்? முடிச்சிக்கணும்ன்னா.. ஸாரி.. அப்படிச் சொல்லவே எனக்குத் திக்குனு இருக்கு.. நம்ம இருவர் சம்பந்தப்பட்டதை நாம தானே முடிச்சிக்கணும்?.."

"நாம- அவங்க இந்த ரெண்டுமே கூட வேண்டாம்.." என்று எதையோ சொல்ல வந்தவள், சட்டென்று தலை நிமிர்த்தி அவனைக் கூர்மையாகப் பார்த்தாள். "ப்ரியன்.. இப்போ என் மனசிலே இருக்கறதைத் தெளிவா சொல்ல முடியும்ன்னு தோண்றது.." என்று அவன் வலது கையை விரித்து ரேகைப் பிரதேசத்தில் கோலம் போட்டபடி, "இப்போ சொல்லட்டும்மா?" என்று சொல்லி லேசாகச் சிரித்தாள்.

"சொல்லு." என்றவனின் குரலில் ஆர்வம் இருந்தது.

"காதல்ன்னா அன்புன்னு சுலபமாச் சொல்லிடறாங்க.. அதையே கதைகள்லே பன்னிப் பன்னி விதவிதமா சொல்ல முயற்சி செஞ்சிருக்காங்க. இன்னும் சொல்லி முடிஞ்ச பாடில்லே. நம்ம தி.ஜா. சார், அவர் பாணிலே மனசை விண்டு காட்டறாரே தவிர, அவரும் தீர்மானமா இதுக்கு இதான் அர்த்தம்ன்னு முழுமையா சொல்லிட்ட மாதிரி எனக்குத் தோணலே. யாரையும் சொல்லிக் குத்தமில்லே. ஏன்னா, அது அப்படி.. இந்தக் காதல்ங்கறது ஒவ்வொருத்தருக் கும் ஒவ்வொரு மாதிரியான அனுபவமா இருக்கு. 'காதல், காதல்'ன்னு ஜபிக்கலாமே தவிர இதான் காதல்ன்னு வரையறுத்து வார்த்தைலே வடிச்சு சொல்ல முடியும்ன்னு எனக்குத் தோணலே. ஒருத்தர் மனசிலே பிரவாகமா பொங்கித் தளும்பற உணர்வை, எழுத்திலே எழுதிக் காட்டுன்னா முடியுமா?.. முடியும்ன்னு தெரிலே.. "

அவள் உணர்வதை அவளே சொல்லி முடிக்கட்டும் என்று காத்திருந்தான் ப்ரியன்.

"அவ்வளவு தூரம் போவானேன்?.. உன்னை ஏன் காதலிக்கிறேன்னு யாராவது கேட்டால் எனக்கே அதுக்கு தகுந்த பதிலைச் சொல்லத் தெரியாது. உன்னை எனக்குப் பிடிச்சிருக்கு. அதைத்தான் நான் காதல்ன்னு நினைச்சிக்கிட்டிருக் கேனோ என்னவோ. உங்கிட்டே என்னல்லாம் எனக்குப் பிடிச்சிருக்குன்னு ஒரு லிஸ்ட்டே போடலாம். நான் என்ன சொன்னாலும் உனக்குக் கோபமே வராது; அது பிடிச்சிருக்கு. நான் எதுக்காச்சும் வருத்தப்பட்டா ஒரு வினாடி கூட உன்னாலத் தாங்கிக்க முடியாது; இதுவும் எனக்குப் பிடிச்சிருக்கு. உன்னாலே தாங்கிக்க முடியாதுங்கறத்துக்காகவே எந்த வருத்தத்தையும் நான் உங்கிட்டே வெளிக்குக் காட்டிக்கறதே இல்லைன்னு ஆரம்பிச்சு நாளாவட்டத்திலே இதுவே இப்போ என் குணமாயிட்டுச்சு. அப்படி என்னோட குணத்தையே உன்னோட காதல் மாத்தியிருக்கு. இது பத்தி எங்க அம்மாக்கானா ஆச்சரியமான ஆச்சரியம். அப்புறம், எதுக்கும் கவலைப்படாம சிரிக்கச் சிரிக்கப் பேசற உன் வழக்கம் எனக்கு ரொம்பப் பிடிக்கும். அதுனாலே உன்னோட கொஞ்ச நேரம் இருந்தாலே நான் படற சந்தோஷம், ஓ, இட் ஈஸ் கிரேட்! இப்படி இன்னும் சிலது சொல்லலாம். பலதை சொல்ல முடியாம உணர்றதா இருக்கு. "

"..........................."

ஒரு வினாடி தாமதித்து, "அன்னிக்கு லைப்ரரிலே ஜானகிராமன் புஸ்தகத்தை நீ நீட்டினப்பவே, நீ விசேஷமான ஆள்ன்னு தெரிஞ்சிகிட்டேன்" என்று ரதி சொன்ன போது ப்ரியன் அடக்க முடியாமல் கலகலவென்று சிரித்தான்..

"ஏன் சிரிக்கறே?.."

"என்ன வேடிக்கை, பாரு.. இத்தனை நாள் கழிச்சு ஞாபகம் வைச்சிண்டு இந்த விஷயத்தைச் சொல்றே, பாரு!"

"அதுக்காக சிரிப்பாங்களாக்கும்?" என்று பொய்க்கோபம் காட்டினாள்.
"அதுக்காக சிரிக்கலே, ரதி!"

"பின்னே எதுக்காக?.."

"எதுக்காகன்னா, நான் திருப்பிக் கொடுத்த ஜானகி சார் புஸ்தகத்தை நீ நூலகர்கிட்டே கேட்டு வாங்கிகிட்டுப் போனப்போ, அவர் என்ன சொன்னார்கறது ஞாபகம் இருக்கா?.. 'இவர் எழுதின புஸ்தகத்துக்குத் தானே தவமிருந்தீங்க, இந்தாங்க'ன்னு உங்கிட்டே 'அன்பே ஆரமுதே' புஸ்தகத்தைக் கொடுத்தார்லியா, அன்னிக்கே உன்னைப் பாத்து, 'அட, நம்மளைப் போலவே அவர் புஸ்தகத்துக்காக தவம் இருக்கற இன்னொரு ஆளு'ன்னு நெனைச்சிக் கிட்டேன். என் நெனைப்புக்கு ஏத்த மாதிரி, நீ நம்பாளானதும் ஜென்ம சாபல்யம் அடைஞ்ச சந்தோஷம் எனக்கு!" என்றான்.

"ஐயே!.."

"என்ன ஐயே?.. மனசிலே படறதை மறைக்காம சொல்றத்துக்கு எதுக்கு வெக்கம்? ஜானகி சார் மாதிரியே ஜானகி சாரோட வாசகர்களும் இருக்கணும் இல்லியா?"

"அது கூட சரிதான். இப்படி எடுத்துக் குடுத்தாத்தான் மனசிலே நினைக்கறதைச் சொல்றத்துக்கும் பிடிபடறது. இப்போ என் மனசிலே படறதைச் சரியாச் சொல்ல முடியும்ன்னு நினைக்கறேன், ப்ரியன். நமக்கு கல்யாணம்ன்னு ஒண்ணு ஆயிடுத்துனா, குடும்பம் குட்டின்னு ஏற்பட்டுப் போயிடுத்துனா, இந்தக் காதல்லாம் பஸ்பமாகிடுமேங்கற கவலை தான் என்னை அரிக்கறது.. இப்ப உனக்கும் எனக்கும் நாம்ப ஒருத்தரை

ஒருத்தர் நேசிக்கறது தான் முக்கியமானதா இருக்கு. கல்யாணம் ஆச்சுனா, இந்த முக்கியம் போய் வேறொரு முக்கியம் இந்த இடத்திலே வந்து உக்காந்துக்கும். இப்படி இன்னொண்ணுக்கு இன்னொண்ணுக்கு இடம் கொடுத்தே, நாளாவட்டத்திலே இது காணாமப் போனாலும் ஆச்சரியம் இல்ல. இதான் என் கவலை. இதுக்கு ஏதாவது மருந்து இருந்தா, சொல்லு, ப்ரியன்" என்றாள் ரதி.

## 3

**நீள் விசும்பு நட்சத்திரங்களில்**

**இசை இன்ப ராகங்களில்**

**ஜோதிட சாத்திர ராசிகளில்**

**அடர் கானக விலங்குகளில்**

**நெடிதுயர்ந்த மரங்களில்**

**ஆறறிவு மானுடர்களிலும்**

**உண்டு ஆம் ஆண் பெண் பேதம்**

"சரியான குழந்தையாய் இருக்கிறாயே!" என்று கைகொட்டிச் சிரித்தான் ப்ரியன். "நல்ல வேளை! என்னிடம் மாட்டினாய்; இன்னொருத்தனாய் இருந்தால் கிடைத்தடா சான்ஸ்ன்னு இன்னேரம் தூக்கிச் சாப்பிட்டுப் போயிருப்பான்"

"எதைச் சாப்பிட்டிருப்பான்?"

"எதை இல்லை; யாரை. யாரைச் சாப்பிட்டிருப்பான்னு கேளு."

அவனைத் தலைச்சாய்த்து விநோதமாகப் பார்த்தாள் ரதி. தான் சொன்னதின் அர்த்தம் சுத்தமாக அவளுக்குப் புரியவில்லை என்று ப்ரியனுக்குத் தெரிந்தது. அதையே தான் அவளும்

அவனிடம் கேட்டாள். "நீ சொல்றது ஒண்ணுமே புரிலே, ப்ரியன்!"

"புரியாது இருக்கற வரை சந்தோஷம்."

"உனக்கென்ன அதில் சந்தோஷம்?"

"என்ன சந்தோஷம்ங்கறதை அப்புறம் சொல்றேன். இப்போதைக்கு நான் கேக்கறத்துக்குப் பதில் சொன்னால் போதும்."

"கேளு, ப்ரியன்.." என்று தாவணியின் தலைப்பை எடுத்து தோள்பட்டை சுற்றி போர்த்திக் கொண்டு பார்க் பென்ஞ்சின் சாய்மான மரப்பலகைகளில் முதுகு சாய்த்து வாகாக உட்கார்ந்து கொண்டாள் ரதி.

"ஓக்கே. முதல் கேள்வி என்னன்னா..." எங்கிருந்து ஆரம்பிக்கலாம் என்று ஒரு நிமிட யோசனைக்குப் பின் ப்ரியன் கேட்டான். "எத்தனை காலத்துக்கு நாம்ப இப்படி ஒருத்தரை ஒருத்தர் காதலிக்கற காரியத்தை மட்டும் செஞ்சிகிட்டு இருக்கலாம்ன்னு நீ நெனைக்கிறே?"

ஓரக்கண்ணால் அவனைப் பார்த்தபடி, "நீ சொல்லு. நீ என்ன நெனைக்கிறே?" என்று அவனைத் திருப்பிக் கேட்டாள் ரதி.

"நான் கேள்வி மட்டும் தான். நீ பதில் மட்டும் தான். அதானே முதல்லேயே சொன்னது?"

"சொன்னது சரி. இப்போ நான் ஏதாவது நீ நெனைக்கறதுக்கு மாறா சொல்லிட்டு நீ வருத்தப்படப் போறையோன்னு பயமா இருக்கு. அதுக்காகத் தான்."

"மாட்டேன். இந்த கேள்வி-பதிலே எதுக்குன்னா.. ஓக்கே. இப்போ நாம ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் மனசாரக்

காதலிக்கறோமில்லையா?.. இந்த நேரத்தில் நம்ம பெற்றோர்கள் இவங்களுக்கு கல்யாணம் செஞ்சு வைச்சாத் தேவலையேன்னு நெனைக்கறாங்க. ஏன் அப்படி நெனைக்கறாங்க.. நாம அதுக்கு என்ன பதில் சொல்லப்போறோம்ங்கறத்துக்காக இந்த கேள்வி-பதில். ஓக்கேவா?"

"ஓக்கே. ஆனா, சுத்த போர் சப்ஜெக்ட் இல்லையா? நான் அந்தக் கல்யாண சப்ஜெக்ட்டையே அவாய்ட் பண்ணனும்ன்னு நெனைச்சா, நீ என்னவோ சுத்தி வளைச்சு அதையையே..."

"விஷயமே அதான். கல்யாணம் தான். இப்போ உனக்கு வயசு 18. பத்து வருஷத்துக்கு முன்னாடி சிறுமி. இப்போ குமரி. குமரி பருவத்திலே தான் காதலே தவிர சிறுமி பருவத்தில் இல்லே. ஏன்னு யோசிச்சுப் பாரு."

"ஏன், நீயே சொல்லு."

"எல்லாத்தையும் நானே சொல்லணும்ன்னா நீ ஏன் ஜானகி ஸார் வாசகியா இருக்கணும்?.."

“பாவம் அவர். அப்பப்போ நடுவிலே அவர் தலையை வேறே ஏன் போட்டு உருட்டறே?.."

"தலையை உருட்டறதில்லை. அப்பப்போ அவரை ரெஃப்வர் பண்ணிக்கறேன். ஏன்னா, நம்ம ரெண்டு பேருக்கும் பொதுவானவர் அவர். நம்ம வாத்தியார். அவர் எழுத்தையெல்லாம் ரசிச்சுப் படிச்சிருக்கோம், இல்லையா?.. அதனாலே, எல்லாத்திலேயும் அவர் என்ன சொல்லியிருக்கிறார்ன்னு நெனைச்சுப் பாக்கற மனசு. அந்த மரியாதையாலே தான். சரி.. கேட்டுக்கோ. மனுஷப் பிறவிக்கு ஒவ்வொரு பருவத்திலேயும் ஒவ்வொரு உணர்வு. குமரி-குமரன் பருவத்து உணர்வு காதல் வயப்படறது.. இந்தப் பருவம் போச்சுன்னா, இதுவும் போகும்னாலும், அந்தந்த பருவ

உணர்வுகளுக்கு ஏத்த மாதிரி இந்த காதல்ங்கற பேரும் மாறும்.. பேரு தான் மாறுமே தவிர, சரக்கு ஒண்ணு தான். அதனாலே காதல் உன்னை விட்டோ என்னை விட்டோப் போயிடுமோன்னு கவலைப்படத் தேவையில்லை. விட்டுக் கொடுத்து வாழற தன்மை இருக்கற வரைக்கும் அது போகவே போகாது. அன்டர்ஸ்டாண்ட்?.."

"அடேங்கப்பா. இன்ரஸ்ட்டிங்..." என்று வலது கையைத் தாங்கலாகக் கொண்டு ரதி மோவாயைத் தாங்கிக் கொண்டாள். "காதல் போகாம இருக்கறத்துக்கு விட்டுக் கொடுத்து வாழணும்ங்கறே. அது போதும் எனக்கு. அப்புறம், சொல்லு.." கண்கள் அவனைத் தீர்க்கமாகப் பார்க்க, சுவாரஸ்யமாக அவன் சொல்வதைக் கேட்க தயாரானாள்.

"ரதி, கல்யாணம்ன்னா கல்யாணத்தோட போயிடும்ன்னா நெனைச்சிருக்கே?.. அதான் இல்லே. கல்யாணம்ங்கறது தான் குடும்ப வாழ்க்கையோட ஆரம்பக் கண்ணி. உனக்கு நீயும் எனக்கு நானும்ன்னு ஒருத்தரை ஒருத்தர் சார்ந்து இருக்கற குடும்ப வாழ்க்கை. இப்படி பார்க்லே உக்காந்து பேசறத் தாண்டி என்னத்தைக் கண்டோம், நாம?.. இதுலேயே மொத்த வாழ்க்கையும் முடிஞ்சிரும்ன்னு நீ நெனைக்கறே?.. கல்யாணம்ன்னு ஆனதும் எங்கடான்னு காத்திருக்கும்; நம்ம ரெண்டு பேரையும் சார்ந்து இன்னொண்ணு; நம்ம உயிர் கலந்து குழந்தையாய் இன்னொண்ணு. குழந்தைன்னு சொன்னதும் உன்னோட கண் எப்படி மினுமினுக்கறது, பாரு."

ரதி நாணித் தலைகுனிந்தாள்.

"குழந்தை மேலே கொள்ற பாசமும், அன்பும் இந்தக் காதலோட இன்னொரு ஸ்டேஜ் தான். காதல் தான் எல்லாத்துக்கும் ஆணி வேர். ஒன்றே, பலவாகி.. காதலோட மகாத்மியம் இது. கண்ணாடிலே முகத்தைப் பாக்கற மாதிரி நம்ம ரெண்டு

பேரையும் நம்ம குழந்தைலே பாக்கலாம். வேதாந்தம் இல்லே, ரதி.. விஞ்ஞான உண்மை."

"அதுசரி.. உனக்குன்னா நீ பேச ஆரம்பிச்சாலே எதெல்லாமோ எங்கிருந்தெல் லாமோ ஓடி வரும்.."

அவள் தோள் திருப்பி, அருகில் விசாலமாக வளர்ந்திருந்த மரத்தைக் காட்டினான் ப்ரியன்."இந்த மாமரத்தைப் பாரு. கொத்துக் கொத்தா மாம்பூ. இந்தப் பூ வடுவாகிக் காயாகணும்; , காய் பழமாகணும். பூவாவே என்னிக்கும் இருக்க முடியாது. அது மாதிரித் தான் காதலும். என்னிக்கும் காதலாகவே இருக்க முடியாது. அதுவும் ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் சாத்தியமில்லாத விஷயம் இது. எல்லாமே வளர்ச்சி சம்பந்தப்பட்டது. வளர்ச்சி மாறுதல்லே போய் தன்னை அடக்கிக்கும். இன்னிக்கு இதுன்னா நாளைக்கு அடுத்ததுன்னு இன்னொண்ணு இருக்கும். இப்படி ஒண்ணு போய் இன்னொண்ணுன்னு ஒவ்வொண்ணா மனசிலே உருவாகிண்டு வரும். நமக்குக் கல்யாணம் ஆச்சுனா, உலகம் நம்மைப் பாக்கற பார்வையே மாறிப்போகும். இப்போ நாம் காதலர்கள்ன்னா கல்யாணம் ஆனவுடனே தம்பதிகள். தாம்பத்ய உறவு பூணுவதால் தம்பதிகள். நமக்கு நாமே ராஜா-ராணி."

"கல்யாணம் ஆனாத் தான் அதெல்லாமா?"

"பின்னே? நாம கல்யாணம் செஞ்சிக்கப் போறோம்ங்கற நிச்சயத்தில் தான் நம்மைப் பெத்தவங்களே இப்படி ப்ரீயா சுத்த விட்டிருக்காங்க. இல்லேனா, நீ வீட்டுக்குப் போனதும், 'வயத்லே நெருப்பை கட்டிண்டிருக்கேண்டி'ன்னு உங்கம்மாவே சொல்லுவாங்க. எங்கப்பா, கேக்கவே வேண்டாம். அவரை யாரும் கைநீட்டி தப்பா எதுவும் சொல்லிடக்கூடாது. எத்தனை நாளைக்கு வெறும் காதல்ன்னு ஊருக்கெல்லாம் ரீல் விட்டிண்டிருக்க முடியும்? சொல்லு.."

"அப்போ நான் சொல்றதெல்லாம் உனக்கு ரீலாத்தான் படறதா?.. உனக்கு அப்படியில்லையா?" என்று வெகுண்டாள்.

"சரி ரீல் இல்லே. உண்மைனே வைச்சிண்டாலும், இப்படியே இருந்துடுவோம் ங்கறது இயற்கைக்கு முரணானது. ஆண்-பெண் பேதமும் இப்படியே இருந்திடக்கூடாதுங்கறதுக்காகத் தான். பேசிண்டே இருக்கறச்சே உன் கையைத் தொட்டுப் பாக்கறேன், இல்லையா?.. நீ என் கையை விரிச்சு கோடு போட்றே, இல்லையா?.. இதெல்லாம் எதனால்ங்கறே?.. இங்கேயே தேங்கிடாதே. இதைத் தாண்டி இன்னும் இருக்குங்கறதுக்காக."

ரதியின் முகம் 'உர்'ரென்று இருந்தது. கொஞ்ச நேர மௌனத்திற்குப் பிறகு, "ச்சீ! போகிறது பார் புத்தி!" என்றாள்.

"புத்தி சரியாத்தான் போறது. அதான் உனக்கும் சொல்ல முடியறதுன்னு தெரிஞ்சிக்கோ. மல்லிகைப் பந்தல்லே பார்த்திருப்பியே! செடியோட நுனி முனை மேற்கொண்டு படறதுக்கு அல்லாடித் தவிச்சிண்டிருக்கும். அதை உரசின மாதிரி ஒரு கொம்பை நட்டா அதை இறுக்கிப் பிடிச்சிண்டு மேலே மேலே போக ஆரம்பிச்சிடும். கல்யாணம் கூட கொழுகொம்பு தான். காதலின் மேற்கொண்டான வளர்ச்சிக்கு ஆதாரமா இருக்கற கொழுகொம்பு."

"கல்யாணம் ஆச்சுனாலும் நம்ம காதலுக்கு என்னிக்கும் அழிவில்லைங்கறே! அப்படித்தானே?"

"காதல்ங்கறது அத்தனைக்கும் ஆதாரம். அதுக்கு அழிவேயில்லை. ஒவ்வொரு உணர்வுக்கும் ஏற்ற மாதிரி வேறே வேறே ரூபமாத் தெரியறது. அன்பு, நேசம், பாசம், ஆதுரம், கருணை-- அத்தனை உணர்வுகளுக்கும் அதான் அடிப்படை. எல்லா பாஸிடிவ் சிந்தனைகளுக்கும் காதல் தான் உற்பத்தி ஸ்தானம்.. அப்படியிருக்க அதுக்கு அழிவேது?.. சொல்லு."

ரதி ஒன்றுமே சொல்ல வில்லை. யோசிக்கற மாதிரி இருந்தது. ப்ரியன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். திடீரென்று முன்னால் வந்து விழுந்து கண்களை மறைத்த குழல் கற்றைகளை ரதி ஒதுக்கி விட்டுக் கொண்டாள். அவள் இதழ்க்கடையில் லேசாக புன்முறுவல் அரும்பி மலர்ந்தது. அது மந்தஹாசமாய் மாறி குலுங்கிக் குலுங்கிச் சிரித்தாள்.

"இப்போ சரியா?.. கல்யாணம்ன்னா ஓ.கே. தானே?"

"போங்க.. எனக்கு வெக்கமா இருக்கு.." என்றாள். அந்த மரியாதையும் இயல்பான நாணமும் எங்கிருந்து வந்தது என்று தெரியவில்லை.

பார்க் லவுட்ஸ்பீக்கரிலிருந்து 'கல்யாண நாள் பார்க்கச் சொல்லலாமா?..' என்கிற பாடல் வரிகள் காற்றில் தவழ்ந்து வந்தன.

ரதியும், ப்ரியனும் கையோடு கை சேர்த்துக் கொண்டனர்..



மீண்டும் பொருளடக்கம் பகுதி செல்ல ...

# கேள்வி பதில்

**வில்லன் to காமெடியன் - கவர்ந்தவர் யார்?**

**பானுமதி வெங்கடேஸ்வரன் :**

**1) ஒருவரை ஒருவர் தாக்கி, கட்டிப்புரண்டு, ரத்தம் வழிய சண்டை போட்டதை நேரில் பார்த்திருக்கிறீர்களா?**

**# ஓரிரு முறை பார்க்க நேரிட்டது உண்டு.**

**& வேலையில் சேர்ந்த சில வாரங்களிலேயே அப்படிப் பார்க்கவேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்பட்டது. தொழிற்சங்க தகராறு பெரிய அளவில் தொழிற்சாலைக்குள் ஏற்பட்ட காலகட்டம் (1972). ஒரு யூனியனைச் சேர்ந்த முக்கிய நபர் ஒருவரை போட்டி யூனியன் ஆள் தாக்கிய சம்பவம். இப்பொழுது நினைத்தாலும் பயங்கரமாக இருக்கிறது.**

**2) சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஹிந்தி எதிர்ப்பு போராட்டம், இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி போன்றவர்கள் கொலையுண்ட தினங்களில் ஏதாவது பாதிப்புக்கு உள்ளானீர்களா?**

**# இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் எல்லாப் பரிமாணங்களையும் கண்டதும் கேட்டதும் உண்டு. நண்பரின் உறவினரான போலீஸ் ஆபிசர் மாணவர்களுக்கு உதவ எண்ணிப் போய் வாயில் பெட்ரோல் ஊற்றப் பட்டு தீவைத்து மாண்ட அதிர்ச்சி இன்றும் வலிக்கிறது.**

**இந்திரா சென்னையில் "தாக்கப்" பட்டதாக வதந்தி பரவி பஸ் ரயில் இல்லாமல் பத்து கிமீ நடந்ததுண்டு.**

ராஜீவ் மரணத்தன்று பிள்ளைகள் நகரில் திண்டாடி மறுநாள் வீடு வந்தனர். போலீஸ் தகவல் மூலம் அவர்கள் பத்திரமாக இருப்பது உறுதி செய்யப் பட்டது பெரிய ஆறுதல்.

$ இந்தி எதிர்ப்பில், திருப்பூர் ஆய்வாளர் கொளுத்தப்பட்ட சோகம் போகுமுன், நாகையிலிருந்து சென்னை போய்க்கொண்டிருந்தேன்.

மதியம் வீட்டிலிருந்து கொண்டு வந்த இட்லியை சாப்பிட்டுவிட்டு, இலை, பேப்பர் இவற்றைக் குப்பையில் போடப்போகும் போது, ஒரு போலீஸ்காரர் வந்து, தம்பி எங்கே போறீங்க என்று கேட்டு, நான் மாணவனில்லை என்று உறுதிப்படுத்திக் கொண்ட பின், ஸ்டேஷனை விட்டு வெளியேறிவிடுங்கள். சென்னை போகும் ரயிலை கலகக்காரர்கள் கொளுத்தப்போகிறார்கள் என்றார். நான் சமர்த்தாக ஸ்டேஷன் விட்டு வெளியே வந்தால், ..
வெகு நீளமாகப் போகிறதே, ஆர்பாட்டங்களும் நானும் என்றொரு பதிவே எழுதிவிடலாமோ?

& இந்திரா காந்தி மரணத்தன்று நான் அலுவலகத்தில் இருந்தேன். விவரம் தெரிய வந்தவுடன் அலுவலக போக்குவரத்துப் பேருந்துகளை பாதுகாப்பு கருதி ரத்து செய்துவிட்டார்கள். காரில் சென்ற சில பெரிய அதிகாரிகள் பாதி வழியிலேயே கார்கள் நிறுத்தப்பட்டு எங்கும் செல்ல இயலாமல் தேங்கினர். ஒரு கூட்டமாக என் நண்பர்களுடன் மாலை ஐந்தரை மணிக்கு கத்திவாக்கம் ஸ்டேஷனுக்கு சென்று காத்திருந்தோம். ஏழரை மணி சுமாருக்கு ஒரு லோகல் ட்ரைன் வந்தது. அது பீச் ஸ்டேஷன் சென்று அடையும்போது இரவு மணி பத்து. அங்கிருந்து பத்தரை மணிக்குக் கிளம்பிய மின்வண்டித் தொடர் குரோம்பேட்டை சென்றடைய இரவு மணி பன்னிரண்டு ஆகியது.

நல்ல வேளை - ராஜீவ் மரணம் விவரம் எனக்கு அதிகாலையிலேயே என் தம்பி மூலம் தெரியவந்தது. அதனால் வெளியில் எங்கும் செல்லவில்லை. எம்ஜியார் மரணம் குறித்த செய்தியும் காலையில் குரோம்பேட்டை ரயில் நிலையத்தில் தெரிய வந்தவுடன் வீடு திரும்பிவிட்டேன்.

**3) முகநூலில் தங்கள் அன்னியோன்யத்தை பறைசாற்றிக் கொள்ளும்தம்பதிகளைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

# பிறர் சரசத்தை ஒளிந்திருந்து பார்ப்பது ஒரு வக்ரம் (வாயரிசம்) என்றால் இது ஒரு விபரீத வக்ரம், ரிவர்ஸ் வாயரிசம்.

**4 )**



யோகாவில் இந்த
விருக்ஷாசனம் செய்யும்
பொழுது கண்களை திறந்து
வைத்துக் கொண்டால் நன்றாக
பேலன்ஸ் பண்ண முடிகிறது.
கண்களை மூடிக்கொண்டால்
பேலன்ஸ்"குறைகிறதே ஏன்?

# கண்பார்வை மூலம் பெறப்படும் தகவல் அடிப்படையில் நம் மூளை பாலன்ஸ் செய்யத் தேவையான சமாளிப்புகளை

நிர்வகிக்கிறது. அது இல்லாமல் போவதால் தடுமாறுகிறோம்.

5) வில்லனாக இருந்து காமெடியன்களாக மாறியவர்களில் (பாலையா, அசோகன், ஆனந்தராஜ்) உங்களைக் கவர்ந்தவர் யார்?

# கவர்ந்தவர் பாலையா. மற்றவர்கள் சற்று எரிச்சல் தரும் வகை.

==========

இரு வாரங்களுக்கு முன்பு புதன் பதிவில் Dumb charades முறையில் தமிழ் சினிமா பெயர் / தமிழ்ப் பழமொழி எதையாவது உணர்த்தும் காணொளி காட்சிகள் உங்களைக் கேட்டிருந்தேன்.

அது போட்டி இல்லை. ஒரு சிறு யோசனை. ஒரு வாரத்தோடு முடிகின்ற சமாச்சாரம் இல்லை. எப்போது வேண்டுமானாலும் எங்களுக்கு அனுப்பலாம்.

பதினைந்து வினாடிகளுக்குள் இருக்கும் காணொளி காட்சிகள் engalblog@gmail.com மின்னஞ்சலுக்கு அனுப்பலாம். அல்லது உங்கள் அலைபேசியிலிருந்து 9902281582 என்ற எண்ணுக்கு அனுப்பலாம்.

இது என்ன தமிழ்ப் படம்?

Click on the link below:

LINK

நன்றி.
மீண்டும் சந்திப்போம்!

மீண்டும் பொருளடக்கம் பகுதி செல்ல ...

# எங்கள் ஆசிரியர்கள் எழுதிய மின்னூல்கள்




**LINK : INDIA :** https://www.amazon.in/dp/B08BYVY5C3
US : https://www.amazon.com/dp/B08BYVY5C3
UK : https://www.amazon.co.uk/dp/B08BYVY5C3




LINK : INDIA : https://www.amazon.in/dp/B08C2ZGBYJ
US : https://www.amazon.com/dp/B08C2ZGBYJ

UK : https://www.amazon.co.uk/dp/B08C2ZGBYJ




**LINK :**

**INDIA** : https://www.amazon.in/dp/B08CXBPPYN

**US** : https://www.amazon.com/dp/B08CXBPPYN

**UK** :https://www.amazon.co.uk/dp/B08CXBPPYN



---

மீண்டும் பொருளடக்கம் பகுதி செல்ல …

# வாசகர் கருத்து

அன்பு எபி ஆசிரியர்களுக்கு,

மின்னூல் 10 பார்த்தேன். மின்னிலாவின் அட்டையில் வனப்பு சேர்ந்திருக்கிறது. உள்ளேயும் சரக்கு ஏறிக்கொண்டிருக்கிறது ! Exclusive பகுதிகளை நீலத்தில் கொடுத்திருப்பது தாவுவதற்கு எளிதாக இருக்கிறது.

பொருளடக்கத்தில் எதையாவது க்ளிக்கினால், அங்கே சரியாகப் போய்விடுகிறது சிலசமயங்களில். வேறொரு சமயம் '28 வயதில் பணக்காரனாவதைப்' பற்றி ஆங்கிலத்தில் பேசுகிறது! கொஞ்சம் கவனியுங்கள்.

வாழ்த்துகள் – மின்னூல்களுக்கும் சேர்த்து,

அன்புடன்,
ஏகாந்தன்

மற்ற வாசகர்கள் அனுபவம் என்ன?

நான் சோதிக்கும்பொழுது, எல்லாம் சமர்த்தாக, சரியாக வருகின்றது. ஏகாந்தன் சார் கூறியிருப்பது போல் மற்றவர்களுக்கு ஏதேனும் வேறு தளங்களுக்கு இணைப்பு வருகிறதா என்று கூறவும்.

நன்றி!

மி நி ஆ கு

## மின்நிலா 011


**அட்டைப்படம் மிக அருமை. திரு. ராமன் சாரின் புகைப்படம் வண்ணமயமாக இருக்கிறது. ஒரு தாவரம் இத்தனை அழகாக போஸ் கொடுக்கிறது. பிரமாதம் சார்.**

**அதே போல நெல்லைக்கு இத்தனை கற்பனா சக்தி இருப்பது இப்போதுதான் வெளிவருகிறது. பொன்மேனி உருகுதே:)**

அன்புடன்,

ரேவதி.நரசிம்ஹன்.

**(மின்நிலா 010 - அட்டைப்படம் எங்கேயோ சுட்ட படம் என்கிறார் ராமன்!)**




மீண்டும் பொருளடக்கம் பகுதி செல்ல ...

# காயத்ரி அப்பா! :: ஸ்ரீராம்

முன் பகுதி :

தூக்கக் கலக்கத்துடன் 'அவர்' நின்றிருந்தார்.

"என்ன வேணும்? யார்?" என்றார் கொட்டாவி விட்டுக்கொண்டே.

கடகடவென்று விஷயத்தைச் சொன்னேன். இதுவரை நடந்த நிகழ்வுகளால், கிடைத்த அனுபவங்களால் நம்பிக்கை இழந்து, அதனாலேயே குரல் பேச முடியாமல் தடுமாற, கலங்கியிருந்த என் கண்களை இரவின் குறைந்த வெளிச்சத்தில் அவர் பார்த்திருந்தார் என்று பின்னர் தெரிந்தது.

சொல்லி முடித்ததும் அவர் உள்ளே செல்லத் திரும்பினார். விளைக்கை அணைத்து, கதவைத் தாழ் போடப் போகிறார். இதுதானே எனக்கு இப்போதைய முன் அனுபவம்...

என் மனதில் வெறுமையும் இயலாமையும் நிரம்பின. அடுத்து என்ன செய்யப்போகிறோம், எங்கு செல்வது என்கிற யோசனை ஓடியது. சற்று தூரம் சென்றால் பிரதான சாலைக்குச் சென்று விடலாம். அங்கு போய்த் தேடும் முன்பு வீட்டுக்குச் சென்று தகவல் சொல்லி விட்டு வரலாம் என்று தோன்றியது. அவர்களும் கவலையுடன் காத்திருப்பர். என்னைப் பற்றிய கவலையும் சேர்ந்திருக்கும். அல்லது சைக்கிளிலேயே அழைத்துச் சென்று விடலாமா?

இந்தச் சிந்தனைகள் நொடியில் கடக்க, அவர் விளக்கை அணைத்தார். கதவைத் தாழ் போட்டார் - வெளியில் வந்து. சட்டை அணிந்துகொண்டே ஆட்டோவை நோக்கி வந்தார். முகத்தில் ஈரம் இருந்தது. அது தூக்கத்தைப் போக்க அவர் தெளித்துக் கொண்ட தண்ணீரினால் மட்டுமல்ல என்று தெரிந்தது..

ஆட்டோவை ஸ்டார்ட் செய்து "எங்கே?" என்றார் சிக்கனமாக. நான் முன்னே சைக்கிளில் வழிகாட்ட, வீடு வந்தோம். காத்திருந்த பாஸையும், பெரியவனையும் ஆட்டோவில் ஏற்றி, சைக்கிளை எங்கள் வீட்டுக்குள் ஏற்றி வைத்து, அப்பாவிடம் கதவைப் பூட்டிக்கொள்ளச் சொல்லிவிட்டு நானும் ஆட்டோவில் ஏறினேன். இடத்தைச் சொன்னேன்.

ஆட்டோ விரைந்தது. அவர் திரும்பி குழந்தையை ஒரு பார்வை பார்த்துக்கொண்டார். நீண்ட பயணத்தின் இடையிலேயே ஒரு சிறு ஆஸ்பத்திரி திறந்திருக்க, அவர் அங்கு நிறுத்தினார். "இங்கில்லை..." என்று நான் தொடங்கவும், அவர் "குழந்தை என்ன நிலையில் இருக்கிறதோ... இங்கு பார்த்து விடலாம்.." என்று சொல்லி அவர் முன்னே உள்ளே சென்றார்.

நாங்களும் தொடர்ந்தோம்.

உள்ளே எதுவும் சரியாக இல்லை. இரண்டு இளம் பெண்கள் மட்டும் அமர்ந்து பேசிக்கொண்டிருக்க, மருத்துவர் இருப்பதற்கான அறிகுறிகள் இல்லை. அந்தப் பெண்கள் எங்களை அமரச் சொன்னார்கள். "மருத்துவர் இதோ வந்து விடுவார்.." என்று சொல்லி விட்டு அங்கிருந்த ஒரு பணியாளரை அழைத்தார். "நீ போய் டாக்டரை அழைத்து வா... கேஸ் வந்திருக்கு என்று சொல்லு" எங்கள் போன்றோரின் அவசரம் அவர்களுக்கு தினசரி வாடிக்கை, பழகிப்போன ஒன்று.

அவர் டாக்டரை அழைத்துவர உள்ளே செல்வார் என்று பார்த்தால், வெளியே கிளம்ப, என்னவென்று விசாரித்தோம். சைக்கிளை எடுத்துக்கொண்டு வேறு ஏரியா சென்று சொல்ல வேண்டுமாம்.

"கவலை வேண்டாம்... டாக்டர் கிட்ட பைக் இருக்கு" என்றாள் ஒரு இளம்பெண்.

எனக்கு சரியாகப் படவில்லை. என்ன செய்வது என்று நான் யோசிக்கும் முன் "வாங்க என்று எங்களையும் அழைத்துக்கொண்டு ஆட்டோக்காரர் வாசல் நோக்கிக் கிளம்பிவிட்டார்.

வெளியில் வந்து கிளம்பி நான் சொன்ன அந்தப் பெரிய குழந்தைகள் மருத்துவமனைக்கே சென்றோம். இறங்கியதும் "எவ்வளோ கொடுக்கணும்?" என்று கேட்டேன். பதில் சொல்லாமல், "வாங்க உள்ளே போகலாம்" என்று உடன் வந்தார்.

நாங்கள் ரிசப்ஷனில் அட்மிஷன் ஃபார்மாலிட்டீஸ் முடித்துக் கொண்டிருக்கும்போது அவர் நேரத்தை வீணாக்காமல் உள்ளே சென்று ஒரு பெண்ணுடன் வந்து விட்டார். குழந்தையை எடுத்துக்கொண்டு அவர்கள் உள்ளே விரைந்தார்கள். "நீங்கள் இங்கேயே வேலையை முடிச்சுக்கிட்டு இருங்க இதோ வர்றேன்" என்று விட்டு ஆட்டோக்காரர் அவர்களுடன் சென்றார்.

சற்றுநேரத்தில் நாங்களும் உள்ளே சென்றோம். பையனுக்கு ஏற்கெனவே கைகால்களில் ட்ரிப் போட்டு பழைய மருத்துவமனையில் நரம்புகளை சேதப்படுத்தி வைத்திருக்க, இப்போது தேடித் தேடி குத்தியபோது எங்களுக்கு வலித்தது.

அங்கே நான்கு நாட்கள் இருந்தோம். ஆட்டோக்காரர் ஒரு மிகச் சாதாரணமான கட்டணத்தை வாங்கிக்கொண்டு கிளம்பிச் சென்றார். அதற்குமுன் அவருடன் பேசியதில் அவருக்கு சில நாட்களுக்கு முன்னால்தான் குழந்தை பிறந்திருந்ததாகவும், அந்தக் குழந்தையைப் பார்க்க சேலம் சென்று விட்டு அப்போதுதான் அவர் வந்து தூங்கத் தொடங்கியதாகவும் சொன்னார். அதைக்கூட அவர் முன்னாலேயே சொல்லவில்லை என்பதும், அவர் துளிக்கூட களைப்பாக இருப்பதாகவோ, சோர்வாகவோ அலுப்பையோ காட்டிக்கொள்ளவில்லை என்பதுதான் சிறப்பு. அப்படியும் ஆட்டோக்காரர்கள் இருக்கிறார்கள், இப்படியும் இருக்கிறார்கள். ஆட்டோக்காரர்கள் என்று தனிப்படுத்திச் சொல்லாமல் பொதுவாகக் கூடச் சொல்லலாம். அவர் எங்களிடமிருந்து கிளம்பும்போது நள்ளிரவு மணி இரண்டை நெருங்கி கொண்டிருந்தது. என்ன தலையெழுத்து? இறக்கி விட்டுவிட்டு அவர் பாட்டுக்குச் சென்றிருக்கலாம்.

இன்று வரை அவர் பெயர் எனக்குத்தெரியாது. அப்புறம் பலமுறை அவரைப் பார்த்துப் பேசி இருக்கிறோம் என்றாலும் அவர் பெயர் எங்களை பொறுத்தவரை காயத்ரி அப்பா!

இப்போது கூட எங்களுக்குள் அடையாளத்துக்கு அப்படித்தான் சொல்வோம்.

நான்கு நாட்கள் அந்த மருத்துவமனையில் இருந்து குழந்தையை குணமாக்கிக் கொண்டு வீடு வந்தோம். டாக்டர் வேதவல்லியும், டாக்டர் ஜே விஸ்வநாத்தும் (DR. JV) குழந்தைக்கு உயிர் கொடுத்தார்கள். அப்புறம் பல மாதங்கள் மாதமொருமுறை டாக்டர் ஜேவி என்று அறியப்பட்ட ஜே விஸ்வநாத்தை சென்று பார்த்து வருவோம்.

# பொக்கிஷம் : சில ஜோக்ஸ்... ஸ்ரீராம்

## "தயவு செஞ்சு சீக்கிரம் வாங்கப்பா...!"




## மூட்டைப்பூச்சியால் விளைந்த விபரீதம்!


என் முதுகு பக்கம்
விளையாடிட்டிருந்த
மூட்டையை தேடிக்
கண்டு பிடிச்சு

# அது யாருக்குத் தெரியும்? இது ஜோக்!



"பர்ஸ் தொலைஞ்சு போச்சுங்க!"

"அதிலே விலாசம் இருக்குதா?"

"இருக்குதுங்க. ஆனால் அது என் விலாசம் இல்லிங்களே!"

# தன்னடக்கம் இல்லீங்க...



# அது ஒரு காலம்...

## விலைவாசி—அன்றும் இன்றும்

எனக்கு ஏழு வயசு இருக்கும். என் தந்தையார் அரிசி வாங்கிவர என்னையும் மண்டிக்கு அழைத்துச் சென்றார். மண்டியில் இருந்த வேலையாட்கள் மரக்காலைக் கொண்டு அரிசியை அளந்து அளந்து கோணிப் பையில் கொட்டிக்கொண்டே இருந்தார்கள். என் தந்தையாருடன் வந்த ஆளும் ஒரு பெரிய கோணிப் பையை வைத்துக் கொண்டு, அரிசியை அளந்து கொட்டும் ஆளுக்கு முன்பு வந்து நின்றான். அந்தக் கோணிப்பையில் மரக்காலைக் கொண்டு அளந்து அளந்து கொட்டினான். கோணிப் பையில் முக்கால் பாகம் நிறைந்துவிட்டது. அந்தப் பையை முதுகின்மேல் சுமந்து கொண்டு தூக்க முடியாமல் மெதுவாக நடந்து வந்தான். ஐந்தேகால் ரூபாய்க்கு வாங்கிய நாற்பத்தேழேகால் படி அரிசி அது.

ஏறத்தாழ முதல் யுத்தம் துவங்குவதற்கு முன்பு வரையில் நம் நாட்டில் அரிசி, துணி முதலிய யாவும் அவ்வளவு அதிகமாக உயரவில்லை. யுத்தம் முடிந்த பிறகு ஒரு ரூபாய்க்கு 5 படி, 6 படி அரிசி என்று விற்றார்கள். பிறகு ஒரு ரூபாய்க்கு நான்கு படி ஆனபோது பெரிய குழப்பமே ஏற்பட்டது. தொழிலாளர்கள் ஒற்றைவாடைத் தெருவிலுள்ள அரிசி மண்டிகளில் புகுந்து மூட்டை மூட்டையாக எடுத்து அவிழ்த்துத் தெருவில் கொட்டினார்கள். ஏழை மக்கள் அவர்களோடு சேர்ந்துகொண்டு கூடை கூடையாக அந்த அரிசியைத் தத்தம் வீட்டிற்கு எடுத்துச் சென்றார்கள். அதனால் அரசாங்கம் உடனே நியாய விலைக்கடை என்று ஒன்று திறந்து ஒரு ரூபாய்க்கு ஐந்து படி வீதம் உதவினார்கள். அதனால் நாட்டில் சிறிது அமைதி நிலவியது.

அத்தகைய மலிவான காலம் இனி எந்தக் காலத்திலும் வராது என்றே எனக்குத் தோன்றுகிறது. இருபது ஆண்டுகளுக்கு முன்பு இருந்த ஒரு ரூபாய் இப்போது பதினேழு காசுகளுக்குச் சமமாக இருக்கிறது என்று பொருள்நூல் நிபுணர்கள் கூறுகிறார்கள். போகப்போக எந்த நிலையில் போய் நிற்குமோ, தெரியவில்லை. என்னுடைய எழுபத்துநான்கு வயசிலேயே இத்தகைய மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

—பேராசிரியர் மயிலை சிவமுத்து

## படித்தது : அப்படியா?

**மதுரைக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. அங்கே கோயில் கொண்டிருக்கும் அப்பனைவிட அம்மைக்கே சீரும் சிறப்பும் மிகுதி! அதனால் "மாது உறையும் பேரூர்" என்று முதலில் வழங்கி, அதுவே "மதுரைப் பேரூர்" எனத் திரிந்து, பின்னர் மதுரையாக நிலவுவதாயிற்று" என்று தமிழறிஞர்கள் சொல்வார்கள்.**

**- புலியூர் கேசிகன், "புகழ் பெற்ற பேரூர்கள்" -**

மீண்டும் பொருளடக்கம் பகுதி செல்ல ...

# பாவை ஓவியம்.. துரை செல்வராஜு

முன்னமொரு வியாழன் பதிவில் ஒரு படம் வெளியிட்டிருந்தேன். அதற்கு ஒரு கவிதை எழுதி இருப்பதாக துரை செல்வராஜூ ஸார் சொல்லி இருந்தாலும் அனுப்பவே இல்லை. 'பல்லவி கிடைக்கவே இல்லை' என்றார். அனுப்புங்களேன் என்று மறுபடியும் கேட்டபிறகு சென்ற வாரம் அனுப்பி வைத்திருந்தார். அது இங்கே.....



மேலே உள்ள படம்தான் செல்வராஜூ ஸாரை இந்தக் கவிதையை எழுதத் தூண்டியது என்றாலும் ஜீவி ஸார்

## மின்நிலா 011

**விருப்பப்படி அவரே அனுப்பி உள்ள இந்தப் படத்தையும் இந்தக் கவிதைக்குப் பொருத்தமாக இங்கு இணைக்கிறேன். முதலில் படத்துக்கு கவிதை. பின்னர் கவிதைக்குப் படம்!**



## பாவை ஓவியம்..

********************

**அவன்:**

விழிப் புருவ வில்லேந்தி
வெல்லுகின்ற சொல்லேந்தி
நாண் அற்ற நாண் ஏற்றி
நலந் தொடுத்த கவிதை..

மலர்விழியில் மையெழுதி
மைவிழிக்குள் மனம் எழுதி
எனை வரைந்த தூரிகையால்
தனை வரைந்த ஓவியமே..

ஏடறியா மொழியும் நீ
கலை அறியாச் சிலையும் நீ
வழி அறியா வலையும் நீ
விழி அறியா ஒளியும் நீ..

மெல்லிதழில் மேவி வரும்
அமுதா நீ... அழகா நீ...
பொன்னிதழால் பேசி வரும்
தமிழா நீ... சுவையா நீ...

அந்தி வண்ண மெல்லிதழும்
கொஞ்சும் கொஞ்சும்
தமிழ்க் குங்குமத்து வாசம்
நெஞ்சில் தங்கும் தங்கும்...

காற்றில் ஏறிக் காதற்கிளி
செல்லும் செல்லும்
கனவில் கூட அதுவே தான்
வெல்லும் வெல்லும்...

அவள்:
சொல்லுவதும் தமிழைத்தான்..
வெல்லுவதும் தமிழத்தான்..
கொஞ்சுவதும் தமிழைத்தான்..
நெஞ்சமெலாம் தமிழத்தான்..

மங்கை மனம் பொன்னத்தான்
கையிரண்டில் அள்ளத்தான்..
திங்கள் மனம் நோகத்தான்
தென்றல் போல பேசத்தான்...

மாம்பழத்துக் கன்னத்தில்
மச்சம் ஒன்று தேடத்தான்...
மைவிழியின் ஓரத்தில்
உன் அழகைப் பாரத்தான்..

ரதிமதனும் நோகத்தான்
ரகசியங்கள் பேசத்தான்..
காரிருளும் கலையத்தான்
கவிதை ஒன்று தீட்டத்தான்...

கருங்குவளை மலரத்தான்..
கண் மலர்ந்து ஆடத்தான்...
காமனையும் வெல்லத்தான்..
கவிதை ஒன்று சொல்லத்தான்...

பொன் விழியும் கொள்ளத்தான்..
பூஞ் சிரிப்பை அள்ளத்தான்..
சேல் விழியை வெல்லத்தான்..
இதற்கு மேலும் என்னத்தான்!...

மீண்டும் பொருளடக்கம் பகுதி செல்ல ...

# அருண், அங்கிதா அண்ட் அறிவுஜீவி

அன்று என்ன அதிசயமோ அருணும் அங்கிதாவும் ஒன்றாகவே வித்யா வீட்டிற்கு வந்தார்கள்!

வித்யா : " அட! ஆச்சரியமா இருக்கே! எப்படி ரெண்டு பேரும் ஒரே நேரத்தில் இங்கே வந்தீங்க! "

அ ஜீ : " அதுவும் நல்லதுக்குத்தான் வித்யா. இப்போ ரெண்டு பேரும் ஒருவரைப் பற்றி மற்றவர் எதுவும் குறை சொல்லமுடியாது அல்லவா! "

அங்கிதா : " அங்கிள் - அது குறை சொல்வது இல்லை அங்கிள் - சும்மா ஒரு த்ரில் - அவ்வளவுதான்"

வித்யா : " முந்தி ஒரு நாள் (**மின்நிலா 007) நீ முதலில் வந்தப்போ ..... "

அங்கிதா : " ஆண்ட்டி - வேண்டாம் இப்போ அந்தப் பேச்செல்லாம் வேண்டாம். நான் எங்க வீட்டுல செஞ்ச கொழுக்கட்டை கொண்டு வந்திருக்கேன் - வாங்க எல்லோரும் அதைத் தின்றுகொண்டே பேசலாம். "

அருண் : " அங்கிள் - அது என்ன சஸ்பென்ஸ்? அங்கிதா முந்தி வந்த அன்றைக்கு என்ன சொன்னாள்? "

அங்கிதா : " அதுவா - அது மின்நிலா படிக்கறவங்களுக்குத்தான் தெரியும்!"

அருண் : " இந்த வீக் எண்டுல படிச்சுப் பார்த்துடறேன். "
வித்யா : " சரி வாங்க எல்லோரும் அங்கிதா வீட்டுக் கொழுக்கட்டைகள், நான் செய்த கொழுக்கட்டைகள், போளி, ஆமவடை எல்லாம் சாப்பிட்டுக்கொண்டே பேசுவோம்."

**அருண் : " அங்கிள் - இந்த ஆம வடைக்கு இந்தப் பெயர் வரக் காரணம் என்ன?"**

**அ ஜீ : " எங்கள் ப்ளாக் கிச்சன் கில்லாடிகள் சொன்னால்தான் உண்டு. விக்கிப் பயலுக்கு அது பற்றி ஒன்றும் தெரியவில்லை."**

**அங்கிதா : " என்னது! பக்கிப்பயலா - அது யாரு?"**

**வித்யா : " பக்கி இல்லேம்மா - விக்கி - நம்ம wikipedia"**

**அ ஜீ : " பாவம் - விக்கிபீடியாகாரர்கள் ஏதோ பணக்கஷ்டத்தில் இருக்கிறார்களாம். விக்கியைப் பார்க்க நெட்டுல வருபவர்களிடம் எல்லாம் பண உதவி கேட்கிறார்கள்! நான் கூட இன்று நூற்று இருபத்தைந்து ரூபாய் டொனேஷன் அனுப்பினேன் "**

**வித்யா : " நான் சின்ன விஷயமா ஒன்று கேட்டேன் - அதை வாங்கிக் கொடுக்கவில்லை - விக்கிபீடியாவுக்கு மட்டும் அள்ளியள்ளிக் கொடுக்கிறீங்க! "**

**அ ஜீ : "ஆமாம் - நீ கேட்ட சின்ன விஷயம் ஸ்டிக்கர் பொட்டா - அது வைர மூக்குத்தி அல்லவா! அது போகட்டும், வடைகளில் ஆம - என்று இரண்டே எழுத்து சொன்னால் புரிகிறது அல்லவா? அதுபோல ரயில்வே ஸ்டேஷனில் அதுவும் இந்தியாவில் உள்ள ஸ்டேஷன்களில் மிகவும் சின்ன பெயர் கொண்ட ஸ்டேஷன் எது தெரியுமா? "**

**அங்கிதா : " கோவா?"**

**அ ஜீ : " கோவா என்ற பெயரில் ரயில்வே ஸ்டேஷன் எதுவும் கிடையாது! "**

**வித்யா : " அப்போ நீங்களே சொல்லுங்க அந்த சின்னப் பெயர் ரயில்வே ஸ்டேஷன் எது என்று."**

**அ ஜீ : " இப்"**




**வித்யா : " அது எங்கே இருக்கு? "**

**அ ஜீ : " ஒடிஷா மாநிலத்தில்"**

**அருண் : " உலகிலேயே மிக நீளமான பெயர் கொண்ட ரயில்வே ஸ்டேஷன் எங்கே உள்ளது? அதன் பெயர் என்ன? "**

**அ ஜீ : " அது UK - Wales ல் இருக்கிறது பெயரை சொல்றேன் - ஆங்கிலத்தில் தட்டச்சு செய்து அதை தமிழில் முழி(!) பெயர்த்து சொன்னால் ......**

**ல்லந்பைர்ப்வ்லலல்க்வின்கய்ல்ல்கோகேரிச்வ்யர்ன்ட்ரோப்வ்ல் லள்ளன்ட்டி சில்லயொகோகோகோச் "**
**('Llanfairpwllgwyngyllgogerychwyrndrobwllllantysiliogogogoch')**
**Wales - UK**

**வித்யா : " என்ன! இவ்வளவு நீளமா ஒரு பெயரா ! "**

**அங்கிதா : " வேறு ஊரிலிருந்து இந்த ஊருக்குப் போக வேண்டியவர் - அவருடைய ஊர் ரயில்வே கௌண்டரில் போய் - இந்த ஊர் பெயரைச் சொல்லி, அந்த ஊருக்கு டிக்கெட்**

**கொடுங்க என்று கேட்பதற்குள் - பின்னாடி கியூவுல நிக்கறவங்களுக்கு தாடி வளர்ந்துடும் - ரயில் கிளம்பிப் போய்விடும்!"**




**அ ஜீ : " உலகிலேயே அந்த ரயில்வே ரயில்வே ஸ்டேஷனுக்கு அடுத்த படியாக அதிக எழுத்துகளைக் கொண்ட ரயில்வே ஸ்டேஷன் எது தெரியுமா? "**

**வித்யா : " அதையும் நீங்களே சொல்லிடுங்க!"**

**அ ஜீ : " Puratchi Thalaivar Dr. M.G. Ramachandran Central Railway Station"**




**அருண் : "அட! நம்ம ஊருதானா! "**

[மீண்டும் பொருளடக்கம் பகுதி செல்ல ...]

# ஆயிரம் காலத்தைக் கடந்து விழி நீரினைக் கண்கள் மறந்து…

1970 இல் வெளிவந்த கல்யாண ஊர்வலம் படத்தின் நாயகன் நாகேஷ். பெயருக்கு கொஞ்சம் நகைச்சுவையும், நிறைய சோகமும் கலந்த படம்.

சர்வர் சுந்தரத்தில் அவரை விரும்பாத கே ஆர் விஜயா இதில் விரும்புகிறார்!




கண்ணாதாசன் வாலி மா ரா எல்லாம் பாடல்கள் எழுதி இருக்கிறார்கள் . இதிரைக்கதை இசை தயாரிப்பு ஆர் பார்த்தசாரதி.. உதவி எல் வைத்தியநாதன் என்று போட்டிருக்கிறது. இயக்கம் கே எஸ் சேதுமாதவன்.



கூந்தலிலே நெய் தடவி பாடலைப் பகிர எண்ணி சென்று பார்த்தால் பெரும்பாலும் எந்த விவரங்களும் கிடைக்கவில்லை. ஆனால் இன்னும் இரண்டு பாடல்கள் இதில் இருப்பது தெரிந்தது. ஆண்டவன் முகத்தைப் பார்க்கணும் எனும் டி எம் எஸ் குரலிலான பாடல் மற்றும் எந்தனுயிர்க்காதலன் கண்ணன் கண்ணன் எனும் பி சுசீலா குரலிலான பாடல்.



முதலில் டி எம் எஸ் பாடும் தத்துவப்பாடல்.

ஆண்டவன் முகத்தைப் பார்க்கணும் நான்
அவனிடம் ஒண்ணே ஒண்ணு கேட்கணும்
ஏண்டா சாமி என்னைப் படைச்சே என்னைப்
படைக்கையிலே என்ன நெனச்சே

பணம் இருந்தா இந்த உலகத்திலே
பலகதை நடக்குதப்பா = நீ
படைக்கையிலே கொஞ்சம் நோட்டையும் திணிச்சு
படைச்சா உதவியப்பா
படித்தால் என்ன உழைத்தால் என்ன
பணம்தான் வாழ்வின் எல்லையப்பா

தர்மம் என்பது என்றோ ஒருநாள்
தற்கொலை புரிந்ததப்பா
தலைவன் உடம்பும் நீதிக்கு பயந்து
கோவிலில் மறைந்ததப்பா
அழுதால் என்ன தொழுதால் என்ன
நடக்கும் கதை தான் நடக்குதப்பா

ஒவ்வொரு உயிர்க்கும் இறைவன் தந்தது
ஒரு சாண் வயிறல்லவா
ஒரு சாண் வயிற்றுக்கு வழியில்லை என்றால்
ஒரு முழம் கயிறல்லவா
வயிறும் வயிற்றுக் கயிறும் வைத்து
படைத்தது உந்தன் தவறல்லவா

## மின்நிலா 011

LINK <<<<<

### அடுத்ததாக யேசுதாசும் சுசீலாமாமாவும் பாடும் பாடல்.




கூந்தலிலே நெய் தடவி குளிர் விழியில் மை தடவி
காத்திருக்கும் கன்னி மகள் காதல் மனம் ஒரு தேனருவி
–

இளம் வயது வளர்ந்து வர கனவு தொடர்ந்து வர
கல்யாண ஊர்வலமோ கல்யாண ஊர்வலமோ

மாப்பிள்ளை நெஞ்சம் மஞ்சம்
அதில் மல்லிகைச் செண்டு கொஞ்சும்..
காதலி உள்ளம் வெள்ளம்
அதில் காதலின் ஓடம் செல்லும்
இளம் வயது வளர்ந்து வர கனவு தொடர்ந்து வர
கல்யாண ஊர்வலமோ கல்யாண ஊர்வலமோ

நெஞ்சமெனும் ஆலயத்தில்
நின்றதெல்லாம் என் அண்ணன் மகள்

## மின்நிலா 011

என் மனதைத் தன்னுடனே எடுத்துச் செல்வாள்
அந்த அன்பு மகள்
புதுமனையில் புகுந்து மணவறையில்
கலந்திருக்க கல்யாண நாள் வருமோ
கல்யாண நாள் வருமோ.

ஆயிரம் காலத்தைக் கடந்து
விழி நீரினைக் கண்கள் மறந்து
அன்பெனும் வானத்தில் பறந்து- நீ
வாழ்ந்திட வேண்டும் இருந்து
இளம் பருவ மழையில் இரு
உருவம் நனைந்து வர
கல்யாண ஊர்வலமோ கல்யாண ஊர்வலமோ

>>>>> LINK



அப்பாதுரை

மீண்டும் பொருளடக்கம் பகுதி செல்ல ...

# பொத்தக்குடியில் ஒரு குருவிக்கூடு

**பாசிடிவ் செய்திகள்**

**1) பறவை குஞ்சு பொரித்து கிளம்பும் வரை யாரும் சுவிட்ச் பாக்ஸ் பக்கம் போகவேண்டாம் தெரு விளக்கு எரியாமல் நாம் இருளில் இருந்தாலும் பராவாயில்லை பறவையை தொந்திரவு செய்யவேண்டாம் என்று ஒருமித்த குரலில் முடிவு செய்தனர்.... குருவிக்கூட்டை கலைக்கக்கூடாது என்பதற்காக அது கூடுகட்டிய ஸ்விட்ச் பாக்ஸ் பக்கமே போகாமல் கடந்த நாற்பது நாட்களாக இருளில் வசிக்கின்றனர் சிவகெங்கை மாவட்டம் காளையார் கோவில் ஒன்றியத்தில் உள்ள பொத்தக்குடி கிராம மக்கள்.**



**2) .....சாதாரண, எளிய மக்கள் எப்படி கைகளைப்பெறுவார்கள் என்ற கேள்வியும் மற்றவர்களின் கிண்டலையும் புறக்கணிப்பையும் பொருட்படுத்தாத மன உறுதியும் இவரது இலக்கை, ஒரு உயர்ந்த இலக்கை நோக்கி முன்னேற வைத்தன. இடை விடாது நிதி திரட்டி ஆயிரம் கைகளை இவர் முதன் முதலாக தயாரித்தார்.**

**இதில் 700 கைகளை இலவசமாகவும் மீதமுள்ள 300 கைகளை விற்று வந்த பணத்தில் மறுபடியும் கைகள் செய்து அவற்றையும் இலவசமாக கொடுத்தார்...... (நன்றி மனோ சாமிநாதன் மேடம்)**



கைகள் இல்லாதவர்களுக்கு ரோபோட்டிக் முறையில் கைகளை இவர் எந்த செலவுமில்லாமல் தன் அறக்கட்டளை மூலம் வழங்கி வருகிறார்.
இவரது முயற்சிக்கு வித்திட்டவர் பிரான்ஸ் நாட்டு நிக்கோலச் ஹட்செட். அவர் பயோனிக் முறையில் தனக்குத்தானே கைகளை உண்டாக்கிக்கொண்டவர்.
அவரை முன்னுதாரணமாக மனதில் ஏற்றுக்கொண்டார். பிறவியிலேயே கைகளை இழந்த ஒரு சிறுமிக்கு கைகள் வழங்க முயற்சி செய்த போது உலக நாடுகளில் அதற்கான விலையைப்பற்றி அறிந்து அதிர்ச்சி அடைந்தார். சாதாரண, எளிய மக்கள் எப்படி கைகளைப்பெறுவார்கள் என்ற கேள்வியும் மற்றவர்களின் கிண்டலையும் புறக்கணிப்பையும் பொருட்படுத்தாத மன உறுதியும் இவரது இலக்கை, ஒரு உயர்ந்த இலக்கை நோக்கி முன்னேற வைத்தன. இடை விடாது நிதி திரட்டி ஆயிரம் கைகளை இவர் முதன் முதலாக தயாரித்தார். இதில் 700 கைகளை இலவசமாகவும் மீதமுள்ள 300 கைகளை விற்று வந்த பணத்தில் மறுபடியும் கைகள் செய்து அவற்றையும் இலவசமாக கொடுத்தார்.

இலவசம் என்றால் அதற்கு மதிப்பு இருக்காது என்பதால் இப்போது ஒரு விலையும் இதற்கு மதிப்பிட்டு விற்பனை செய்கிறார்.
எப்படி மூளையின் உத்தரவிற்கு ஏற்ப கைகள் செயல்படுகின்றனவோ, அதேபோல இந்த செயற்கை கைகளும் செயல்படும். இந்த ரோபோட்டிக் கைகள் மூலம் 10 கிலோ எடை வரை தூக்க முடியும்.

தனக்கு முழுமையாக தைரியமும் ஊக்கமும் கொடுத்த தன் மனைவி பெயரான " இனாலி "யையே இந்தக்கைகளுக்கு பெயராக வைத்திருக்கிறார். மற்றவர்களின் நிதி, உதவிகளால் இவரின் இந்த இயக்கம் சிறப்பாக இயங்கி வருகிறது.


https://inalifoundation.com/

இடுகையிட்டது மனோ சாமிநாதன் நேரம் 13:27

**3) தஞ்சை அருகே, விபத்தில் காயம் அடைந்தவரிடம் இருந்த, 4 லட்சம் ரூபாயை, பத்திரமாக குடும்பத்தாரிடம் ஒப்படைத்த, ஆம்புலன்ஸ் ஊழியர்களை, பலரும் பாராட்டினர்.**




----------------------------------- #@$ X $@# ----------------




மீண்டும் பொருளடக்கம் பகுதி செல்ல ...

# ஏதோ மனிதன் பிறந்து விட்டான்

ரமா ஸ்ரீநிவாசன்



எங்கள்பிளாக் நண்பர்களே, வித்தியாசமாக இவ்வாரம் நான் மனித குணத்தைப் பற்றியும் மறைந்திருக்கும் அவனது இரட்டை முகத்தைப் பற்றியும் எழுத முற்படுகிறேன்.

ஒரு நாள் மாலை நேரம் நிதானமாக அமர்ந்து மொட்டை மாடியில் திரையிசை கேட்டுக் கொண்டிருந்தேன். “ஏதோ மனிதன் பிறந்து விட்டான்” என்ற பழைய பாடல் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்த்து. அதன் தாக்கம்தான் இந்தக் கட்டுரை.

மனிதன் என்பவன் இறைவனால் படைக்கப் பட்டவன். ஒப்புக் கொள்கின்றேன். ஓர் மிக முக்கியமான காரணத்தையும் கருத்தையும் மனதில் கொண்டு இறைவன் நம்மை இவ்வுலகில் படைத்திருக்கின்றான்.

ஒவ்வொருவரும் ஓர் நோக்கத்துடன் படைக்கப் பட்டிருக்கின்றோம் என்று நான் நம்புகின்றேன்.

ஆனால்,
“ மனிதனோ ஏதோ பிறந்து வளர்ந்து சீரழிந்துக் கொண்டிருக்கின்றான். பேச்சில்லாமல் நிற்கும் மரம் போலும், உணர்வில்லாமல் ஓடும் நதி போலும் அவன் வாழ்க்கைப் பாதையை அமைத்துக் கொண்டு உலகிற்கும் உற்ற நண்பருக்கும் பயனில்

லாமல் வெறுமனே உயிருடன் ஜடமாய் இருந்துக் கொண்டிரு க்கின்றான்". இதுதான் மனிதனைப் பற்றிய ஒருமித்தக் கருத் தாக இருக்கின்றது.

இருந்தும், நான் வேறு ஓர் வித்தியாசமான கோணத்திலிருந்து மனிதனின் பரிமாண வளர்ச்சிகளையும் அவனது முன்னேற்ற த்தையும் பார்க்கின்றேன்.

ஏனெனில், எங்கோ நடுவில் பல புதுக் குருத்துகளும் தென்பட த்தான் செய்கின்றன.

வெறும் குரங்காய் திரிந்துக் கொண்டிருந்த மனிதன் தன் தே வைக்காக இரு கற்களை உரசியதால் உலகையே வியக்க வை க்கும் மின்சாரத்தைக் கண்டு பிடித்தான்.

தன் வயிற்று பசியைத் தீர்ப்பதற்காக மண்ணைப் பிளந்து பயிர் செய்து விவசாயத்தை பூமியில் மிளிர விட்டான். அன்று முத ல் இன்று வரை விவசாயமின்றி நாமில்லை என்ற நிலை மாற வில்லை.

பசியாறிய பின் "உண்ட களைப்பு தொண்டனுக்கும் உண்டு" எ ன்பதற்கேற்ப காலை நீட்டி படுத்து ஓய்வெடுக்கும் போது பறக் கும் பறவையைக் கண்ணுற்று யோசித்து தன் மூளையைக் கச க்கி பறக்கும் விமானத்தை நமக்கு அறிமுகப் படுத்தினான். உ லகின் பல நாடுகளையும் சில மணி நேரங்களில் இணைக்கும் விந்தையை புரிந்தான்.

அடுத்த படியாக பசிக்கு மீன் பிடிக்கச் சென்றவன் அதன் நீச்ச லை ஆராய்ந்து அதே விஞ்ஞானத்தை அடிப்படையாக வைத் து படகுகளையும் கப்பல்களையும் தன் கற்பனையிலிருந்து நி ஜமாக்கினான்.

பரிமாண வளர்ச்சியானது மேலை செல்ல செல்ல அவன் மேலும் தீர்க்கமாக யோசிக்கத் தொடங்கினான்.

**U TUBE LINK**

பறந்த காடுகளுக்கும் மலைகளுக்கும் நதிகளுக்கும் மத்தியில் வாழ்ந்து வந்த அவன் காற்று வீசும் இரைச்சலையும் மலைகளின் மேல் மோதித் தெறிக்கும் எதிரொலியையும் வைத்து ஒலியின் வலிமையை உணர்ந்தான்.

ஒரு சமயம் தன் கால் மீது விழுந்த கல்லின் வலி தாங்காமல் ஒருவன் அலற, அதே செய்கையை மீண்டும் மீண்டும் நகல் படுத்தி அதன் மூலம் ஒலிவழிப் பேச்சையும் கண்டு பிடித்தான்.

இவை யாவையும் தாண்டி அறிவியல், கணிதம், தொழில் நுட்பம், விண்வெளி அறிவியல், போர்க்கால நுணுக்கங்கள் என பலப் பல துறைகளையும் துவங்கி முன்னேற்றத்தில் பல மைல்கற்கள் கடந்து இறுமாப்புடன் நிற்கின்றான்.

எந்நேரமும் பெண்ணையும் பெண்மையையும் பெருமைப் படுத்திப் பேசுவது போல் ஒரு காலத்தில் நடித்துக் கொண்டிருந்தவன், பெண் என்பவள் தெய்வத்திற்கிணை என்றும் அம்மா என்பவர் பூலோகத்தில் நடமாடும் கடவுள் என்றும் மேடையில் இடைவிடாது சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தவன், தன் இல்லத்தில் மட்டும் மனையாளான பெண்ணையும் தன் அன்னையாகிய பெண்ணையும் அறிவற்றவள் என்றும் பயந்தவள் என்றும் ஏசிக் கொண்டிருந்தவன், அவளின் மேலோங்கிய அறிவை அடையாளம் கண்டு கொண்டு அவளைத் தனக்கு நிகராகவும் ஏன் தனக்கு மேலும் உயர்த்திப் பார்க்கும் மன நிலமையை வளர்த்துக் கொண்டான்.

இவை யாவும் உண்மையாக இருப்பினும், தன் அடிப்படை இயல்பான பயத்தை மட்டும் அவனால் இன்று வரை விடுக்க முடியவில்லை.

எப்பொழுதும் பயத்தையும் சந்தேகத்தையும் தன் உடைகளாக த் தரித்து யாவரையும் ஓர் ஐயக் கண்ணுடன் பார்க்கின்றான். தான் நினைத்தபடி காரியம் நடை பெறவில்லையென்றவுடன் வாடி வதங்கி ஓய்ந் து உட்கார்ந்து விடுகிறான். ஓர் மாறுபட்ட சிந்தனையையும் த னக்கிருக்கும் இயற்கையான அறிவையும் தன் அவசரத்தினா லும் சுயமான சிந்தனையின்மையாலும் மூடத்தனம் என்னும் போர்வையால் போர்த்தி காரியம் விளங்காமல் அடிக்கின்றான்.

அதே போல், உலகு தழுவிய அனைத்து நாடுகளிலுமுள்ள இன் றைய மனிதர்களிடத்தில் நாயைப் போல நன்றியும் இல்லை, நரியைப் போல தந்திரமும் இல்லை, காக்கையைப் போல் ஒற் றுமையும் இல்லை. எந்தப் பயனுமின்றி தனித்திருந்து தானும் கெட்டு மற்றவரையும் எப்ப டி கெடுப்பது என்று ஒவ்வொரு நாடும் ஆராய்கின்றது.

**U TUBE LINK**

பஞ்ச பூதங்களில் மூன்றான காற்றாகவோ, நெருப்பாகவோ, நீ ராகவோ ஜனித்திருந்தால் மனிதனால் பல நன்மைகள் இவ்வு லகிற்கு கிடைத்திருக்கும். காற்றாய் இருந்தால் யாவருக்கும் சுவாசிக்கும் வசதியையும் மகிழ்ச்சியையும் கொடுத்திருப்பான்.

நெருப்பாய் இருந்திருந்தால் எல்லோருக்கும் வெப்பத்தின் சக் தியை உணர்த்தி உணவு சமைக்கவும், உபகரணங்களை இயக் கவும் ஏதுவாய் இருந்திருப்பான்.

நீராய் அவதரித்திருந்தால், யாவருக்கும் தாகம் தீர்க்கும் மழை யாய் பொழிந்திருப்பான்.

மனிதப் பிறவி என்பது ஓர் மகத்தானப் பிறவி. பேசவும் பாடவும் நினைக்கவும் எழுதவும் யோசிக்கவும் கூடிய ஒரே பிறவி மனிதப் பிறவிதான். அது ஓர் அபூர்வ பிறப்பு.

ஆறறிவையும் சேர்த்து மனிதனைப் படைத்த இறைவன் அவன் நல்லவனாகவும் வல்லவனாகவும் வாழ வேண்டும் என்று விரும்பியிருப்பாரோ என்னவோ? ஆனால் தன் மதியீனத்தினாலும் மடமையினாலும் அந்த உன்னதமான ஆறாம் அறிவை ஓர் ஓரத்தில் மூட்டைக் கட்டி வைத்து விட்டு மிருகத்தையும் தோற்கடிக்கும் கேடு கெட்ட பிறவியாய் இன்று வாழ்ந்துக் கொண்டிருக்கின்றான் என்றால் அது மிகையாகாது.

இதற்கு முதல் உதாரணம் இந்த கேடு கெட்ட கொரோனா உயிர்க் கொல்லியே ஆகும்.

இவனா அன்றொரு நாள் பிரமிப்பூட்டும்படி உலகமே விக்கித்து நிற்கும்படி முதல் முதல் நிலவில் காலூன்றும் போது "A gentle step for me, but a giant leap for mankind" என்று கூறி வரலாறு படைத்தான் என்று எண்ணத் தோன்றுகின்றது.

நண்பர்களே, கொரோனா என்னும் ஓர் பயங்கர நோய்தான் இன்று, இந்த கால கட்டத்தில் நம் முன் நிற்கும் நிதர்சனமான, உண்மையான சர்வ தேசப்பரவல் (pandemic).

இப்போதாவது உலக மக்கள் தங்கள் மடமையைப் புரிந்துக் கொண்டு சீர் திருந்தி ஓர் புத்தம் புது வாழ்க்கையைத் துவங்கினாலே ஒழிய சுரங்கத்தின் முடிவில் வெளிச்சம் தெரிய கண்டிப்பாக வாய்ப்பில்லை.

இருப்பினும் நல்ல செய்தி என்னவென்றால், மக்கள் சிறிது சிறிதாக தங்கள் மாசு பட்ட வாழ்க்கை முறையை விடுத்து ஆரோக்கியமான பாதைக்கு மாறி வருகின்றார்கள் என்பதுதான்.

அதன் காரணம் இந்த கொரோனாவின் சர்வ தேசப் பரவலாகக் கூட இருக்கலாம். இருக்கட்டுமே. “மாற்றம் ஒன்றே மாறாதது ” என்பதற்கேற்ப இந்த வாழ்க்கை முறையே பழகிப் பழகி நம் முடைய புதிய இயல்பு வாழ்க்கையாக மாறலாம் அல்லவா?.

உலக மக்கள் யாவரும் சுத்தமாகவும், ஆரோக்கியமாகவும் சந் தோஷமாகவும் உய்ய இந்த கொரோனா நோயும் அதன் தாக்க மும் ஓர் அவஸ்தையான ஆனால் அவசியமான அடிக்கல் நாட் டு என்று எடுத்துக்கொண்டு “புதியதோர் உலகம் செய்வோம்” நண்பர்களே.

ஆகவே கொரோனா தாக்கத்திலும் விழிப்புணர்வும் ஓர் அற்புதமான விடியலும் மிளிறும் என்ற அசைக்க முடியாத நம் பிக்கையுடன் இக்கட்டுரையை முடிக்கின்றேன். நன்றி.

==================




மீண்டும் பொருளடக்கம் பகுதி செல்ல ...

## எங்கள் வாழ்த்துகளும் இணைகின்றன

# சிநேகிதியே.....மஹா ரவி



**எனக்கொரு தோழி.... என்னுயிர்த் தோழி...**

இன்று 60 வது வயதில் தன் பணியிலிருந்து ஓய்வு பெறும் என் உயிர்த்தோழி ரமாவிற்காக என் மனதில் தோன்றிய சில வரிகளை எ ழுதுகிறேன்.

குன்றின் மேல் இருக்கும் விளக்கு எல்லோர் கண்ணுக்கும் தெரியும். வெளிச்சத்தை தன்னுள்ளே கொண்ட எந்த ஒரு பொருளும் எல்லா இடத்திலும் ஒளி கொடுக்கும். அதுபோலவே சிறப்புகள் பல இருக்கும் ஒருவரை நாம் அறிமுகப்படுத்த வேண்டிய அவசியமே இல்லை. ஏனென்றால் அவர்களை எல்லோருமே தாமாகவே கண்டு தெரிந்து கொள்வார்கள். ரமாவும் அதுபோலத்தான். அவரிடம் இருக்கும் கலகலவென்ற சுபாவமே எல்லோரையும் அவரிடம் ஈர்த்துவிடும். .

பாரதியின் இந்த வரிகளை கேட்டவுடன் என் மனதில் தோன்றிய பிம்பம் யார் என்றும் நான் சொல்லவும் வேண்டுமோ ?



"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும், நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும், திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால் செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்; அமிழ்ந்து பேரிரு ளாமறி யாமையில் அவல மெய்திக் கலையின்றி வாழ்வதை உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணற மாகுமாம் உதய கன்னி உரைப்பது கேட்டீரோ!"

"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை^ இவை இரண்டையும் அவரைப் பார்த்தாலே தெரிந்து கொள்ளலாம் . "அஞ்சாத நெறிகள் திமிர்ந்த ஞானம்" இவை இரண்டையும் அவருடன் பேசிப் பழகும் போது புரிந்து கொள்ளலாம்.. பாரதி கண்ட புதுமைப் பெண்ணே நீ முப்பத்தைந்து வருடங்கள் பணி செய்துவிட்டு இன்று பணி நிறைவு பெரும் நன்னாளில் உன உயர் அதிகாரியின் புகழ்ச்சி களையும் சக நண்பர்களின்அன்பையும் தேடித்தந்த ரகசியம் இதுதானோ.

அலுவலகத்தில் மட்டுமல்லாமல் தன் குடும்பத்தை நடத்துவதிலும் தன் குழந்தைகளை வளர்ப்பதிலும் கூட இவர் பாரதி கண்ட புதுமைப் பெண்ணேதான்.

இவரது சிறந்த அறிவாற்றலையும் உலக அறிவையும் இவர் எழுதிய பல கட்டுரைகள் வாயிலாக காணலாம். இதற்கு சமீபத்தில் இவர் வெளிநாடு சென்று திரும்பி வந்தவுடனே எழுதிய கட்டுரையே சான்று.

கீழே உள்ள பாரதியின் வரிகளை மெய்ப்பிக்கும் வீரப்பெண்மணியே நீ வாழ்க..

"உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேரவும், ஓது பற்பல நூல்வகை கற்கவும், இலகு சீருடை நாற்றிசை நாடுகள் யாவுஞ் சென்று புதுமை கொணர்ந்திங்கே திலக வாணுத லார்நங்கள் பாரத தேசமோங்க உழைத்திடல் வேண்டுமாம் விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பாராம்."

என்றோ ஒருநாள் பாரதி கண்ட கனவை மெய்ப்பிக்கும் உம்மைப் போன்ற பெண்களே எல்லோருக்கும் ஒரு எடுத்துக்காட்டு. ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருப்பார் என்பது போல ஒரு பெண்ணின் வெற்றிக்குப் பின்னே ஒரு ஆண் இருப்பார் என்பதே என் கருத்து. அந்தவகையில் இவரின் கணவர் திரு ஸ்ரீநிவாசன் அவர்களுக்கு நான் தலைவணங்குகிறேன்.

சாதனைகள் பல செய்து வாழ்ந்து கொண்டிருக்கும் திருமதி ரமா அவர்களை பாரதியின் வரிகள் கொண்டே இங்கு வாழ்த்துகிறேன்..

"போற்றி,போற்றி!ஜயஜய போற்றி! இப் புதுமைப் பெண்ணொளி வாழிபல் லாண்டிங்கே! மாற்றி வையம்

**புதுமை யுறச்செய்து மனிதர் தம்மை அமர்க ளாக்கவே ஆற்றல் கொண்ட பராசக்தி யன்னைநல் அருளி நாலொரு கன்னிகை யாகியே தேற்றி உண்மைகள் கூறிட வந்திட்டாள் செல்வம் யாவினும் மேற்செல்வம் எய்தினோம்."**




மீண்டும் பொருளடக்கம் பகுதி செல்ல ...

# பேசும் படங்கள் :: kayjee

வால் குடை!



நீலத்திரையில் வெண் தீற்றல்கள்!



இயற்கையின் இணையற்ற அற்புதங்கள்...



அந்தி மாலை இளவெயில் நேரம்...



மீண்டும் பொருளடக்கம் பகுதி செல்ல ...

# மெட்ராஸ் நல்ல மெட்ராஸ் :: நரேன்

### மலைச்சாலை.

*****"

செயின்ட்தாமஸ் மவுண்ட்டிலிருந்து,
கூவம் கடற்கழி வரை,
தென்மேற்கில் பதினான்கு கிலோமீட்டர் நீளத்திற்கு
படுத்திருக்கிறது,
நானூறு வயசுக்கும் மேலான கருமலைப்பாம்பு.



MountRoad, Madras, 1908. ©Vintage Vignettes

தாய் தந்தை,
பாட்டி பாட்டன்,
ஒட்டி ஒட்டன்,
பூட்டி பூட்டன்,
சேயோள்
சேயோன்
ஆறு
தலைமுறைக்கு
முன்னோரும் நடந்த ரோடு மவுண்ட்ரோடு.

உலகில் பெரும்பாலும் மலையும், மலைச்சாலைகளும்,
ஊருக்கு ஒதுக்குப்புறமாய் தான் இருக்கும்.

சென்னையில்
ஊருக்கு நட்ட நடுவில்
கம்பீரமாய் ,
இன்றும் பயணிக்கலாம்
மவுண்ட்ரோடில்

**கிண்டியிலிருந்து**
**இடைமறிக்கும்,**
**அடையாற்றை**
**மர்மலாங் பாலமேறிக் கடந்து,**
**சைதை, நந்தனம்,**
**தேனாம் பேட்டை, ஊடாக**
**ஆயிரம் விளக்கொளி வாங்கி,**
**கோட்டையின் மேற்கு வரை,**
**திரௌபதி சேலையாய்,**
**நீளும்  சென்னையின்**
**இதய தமனி இந்த ராஜபாட்டை.**

**முன்னூற்று நாற்பது வருடங்களுக்கு முன்,**
**ஐரேப்பிய தொழிலாளர்கள், கோட்டையில் இருந்த**
**தொழிற்சாலைக்கு செயின்ட்தாமஸ் மவுண்ட்டிலிருந்து**
**வந்து போக சார்லஸ் மெகார்டினி போட்ட**
**வண்டிப்பாதை.**

**ஹிக்கின்பாதம் புத்தகக்கடை.**
**நூற்றுஎழுபது வருடப் பழமையானது.**

**பதினாலு மாடி எல்ஐசி . தமிழ் சினிமாவில் -**
**இந்த கட்டிடத்தை காட்டினாத்தான், அது**
**சென்னை.**

**ஸ்பென்சர்ஸ் தமிழக முதல் மால்.**

**பதினேழாம் நூற்றாண்டில்**
**பாக்தாத்திலிருந்து வந்த**
**சையத்மூசா ஷா கதாரியின்**

மவுண்ட் ரோடு தர்கா.
ஜாதி மதம் பாராமல் பிணிதீர்க்கும்
நம்பிக்கை மருந்தகம்.

புகாரி ஓட்டல்
சிக்ன் 65 உருவான இடம்.
தேநீர், சமூசா, புதினா சட்னி.
துட்டுக்கு பாட்டு பாடும்
ஜூக் பாக்ஸ்.

இரண்டாயிரத்து ஐநூறு  கடைகள்
இந்தியாவின் இரண்டாவது
மிகப் பெரிய மின்னணு
அங்காடி, ரிச்சி தெரு.

ஜாபர் ஐஸ்கிரீம்,
நியூ எலிபென்ஸ்டோன்
முதல் பால்கனி திரையரங்கு.

சபையர்
பூளுடைமண்ட்
எமரால்டு .
முதல் மல்டி பிளக்ஸ் திரையரங்குகள்.

ஆயிரம் விளக்கேற்றி தொழுகை நடத்தும் மசூதி.

தமிழகத்தின் முதல்
ஜெமினி பறக்கும் பாலம்.

சென்னையின்

**பெருமிதமான மவுண்ட் ரோடு,**
**அண்ணாசாலை ஆகிவிட்டது.**
**இருந்தாலும்,**
**முந்தைய பெயரை**
**உச்சரிக்கும் போது**
**ஆனந்தமாகயிருக்கிறது**
**அம்மாவை அம்மா என்று அழைப்பதைப்போல.**

***

**நரேன் ....**




**இந்த சுட்டி சென்று. மவுண்ட் ரோடு**
**காணொளியைக் கண்டு களியுங்கள்**

## உங்களைப்பற்றி நீங்கள் ...

வாரம் ஒரு வலைப்பதிவர்/ வாசகர் என்ற தலைப்பில், எங்கள் ப்ளாக் வாசகர்கள் எழுதுகின்ற வலைப்பூக்கள் பற்றி மின் நிலாவில் அடுத்த வாரத்திலிருந்து எழுத இருக்கிறோம்.

வலைப்பூவர்களும், வலைப்பூவையர்களும், வலைமொட்டுகளும் வாசகர்களும் தங்கள் பெயர், வலைப்பூ பெயர், வலைப்பூ சுட்டி ஆகிய விவரங்களுடன், தங்கள் வலைப்பூவில் எந்த விஷயங்களுக்கு அவர்கள் முன் உரிமை கொடுத்து எழுதுகிறார்கள் , என்பதையும், அவர்களை எழுத வைப்பது எது - அல்லது 'நான் ஏன் எழுதுகிறேன்' என்ற தலைப்பில் அவர்களைப் பற்றிய ஒரு சுயபுராணமும் எழுதி, அதை

engalblog@gmail.com என்னும் மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.

வலைப்பூ நடத்தாத எங்கள் ப்ளாக் வாசகர்கள், அவர்களைப் பற்றியும், அவர்களுடைய படிக்கும் ஆர்வம் மற்றும் எழுதும் ஆர்வம் குறித்தும் எழுதி அனுப்பலாம்.

எங்களுக்கு வந்து சேரும் அதே வரிசையில், வாரம் ஒருவர் பற்றிய விவரங்களை வெளியிடுகிறோம்.

எங்கள் ப்ளாக் ஆசிரியர்கள் குழு.



இந்த மின்நிலா இதழ் பற்றிய உங்கள் கருத்துகளை,

engalblog@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும் !


K G G